
# ஸ்தம்பம்

# ටැඹ PILLAR



07.08.1927 - 08.06.2000

வண. டானியல் குணரத்தினம் சோமசுந்தரம்
දේවගැති: ඩැනියල් ගුණරත්නම් සෝමසුන්දරම්
Rev. Daniel Gunaratnam Somasundaram

ஒரு நினைவு மலர்
**සමරු කළඹ**
A MEMORIUM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம்

-வண.டீ.ஜீ.சோமசுந்தரம்-

உலகந் தந்தான் பல்வேறு
உயிர் தந்தான் விண்ணின்றுற்ற
அலைவிலாதுயிர்கள் தம்மை
ஆண்டிடப் பணித்ததே ஆதாம்
மலரினில் மணமும் எள்ளில்
எண்ணையும் போல ஒன்றாய்
குலவியே வாழ ஏவாள்
ஏற்றவள் உனக்கென்றீந்தான்.

நாயகன் தலைவன் தன்னை
நலம் பலவுறவே காத்தல்
ஆயவன் கடமை என்று
அர்ப்பணித்தமைந்து வாழ்தல்
வேலியொத்த மென்றோள் மாதர்
கடனெனவுணர்த்தத் தேவன்
நேயந்தங்கிடங்கிடந்த
எலும்பெடுத்தவளைச் செய்தான்

தாதுகு சோலை தன்னில்
தருமரக்கனிகளுண்டு
தீதுணர் மரந்தவிர்த்துச்
சீருடன் வாழ வாழ்த்தி
ஓதுமத் தேவன் விண்ணில்
ஏகினன் அத்தினத்தே
ஓதிய குடும்பவாழ்வின்
உயர்விளை உணர்த்திச் சென்றான்.

ஈசனுரைத்த வாக்கும்
இப்புவித்தலைவன் வாக்கும்
வாசநாறோதியாளும்
விலக்கியே விளைத்தாள் பாவம்
பேசவாந்தகையத்தில்லை
பேருலகெல்லாம் தோற்றாள்
ஆசையால் அச்சணத்தில்
அலகைசெய் வஞ்சகத்தால்.

நாதனையுமாதாமை
நாடியுரை கேளாமல்
மாதவனும் தான் தலைமை
தாங்கியே இழந்தனன்தான்
போதவிழ்தார் பேதையரோ
பேசுமொழியுண்டுமக்கு
வேத முதல்வனவன் விதிமீறில்
விளையுண்டாகும்.

இழந்தவையாவும் மீட்டு
எமையுமன்றிருந்தவாறு
விழுங்கிடச் செய்யவென்று
வேதியனே இயேசு
உழுங்கிய பாவந்தேற்று
உயிரெற்று உலகோருய்ய
துழங்கினார் குருசில் அப்பேர்
தூயு செயப்பலைகை வியந்த(து)


மக்களையுபெற்று மகிழ்வெய்தி
மாண்புடன் கணவன்தனை மதித்து
தக்கதாம்செல்வம் அத்தனையும்
தரணியிற்பெற்று அறஞ்செய்து
மிக்கதாம்வேதநெறி வாழ்ந்து
வேதனவனற்றாள் பணிந்து
திக்கெலாம் போற்றப் பூமிதனில்
தினமும் மோட்சம் கண்டிடுவீர்.

குடும்பந்தன்னில் குழந்தையாய்
உற்றுத்தேவன் துவலயத்தை
இடும்பைகள் காக்க வழிவகுத்து
எமக்குமதை வைத்தேகினான்
திடமுடனிதுவே தேவ வழி
என்பதையுணர்ந்து குடும்பமதை
மடமகளுடனே மாண்புறவே
நடத்திடிலதுவே மோட்சவழி.

This beautiful poem by Rev. D. G. Somasundaram on "Family" was published in his book "A Way to Victory" in 1992. This describes a God-centred, harmonious family.

நிஷாந்தன் 34

1950s ...




The young teacher
full of energy and life ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950s ...



Ready to face life!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960s ...

rendered yeoman service not only as principal but as a role model for the remote village of Sampur.

Mr. D. G. Somasundaram has been promoted to the post of Principal Grade III with effect from 1.7.68.

He is an English Trained Teacher with 20 years service. He was trained at Maharagama from 1947-1949. During his career as teacher he has served at Methodist Central College, Batticaloa, Sandalankawa Central College, Hanguranketa Junior School; and the Maha Vidyalaya of Muttur, Paddiruppu, Kaluthavalai and Thoppur.

He was acting principal of T/Muttur M.V. from 1954—59. He was appointed Acting Principal of T. Sampur M. V. in March 1965, in which post he is now confirmed.

It is worth mentioning he is the only Tamil to be promoted as Principal Grade III, from the Trincomalee District.

He is an old boy of Methodist Central College Baticaloa.

He is the President of the Head Masters Union of Muttur, and also of the Secondary Trained Teachers Union of Trincomalee branch.

## நிரந்தர அதிபர் நியமனம்

கடந்த சுமார் நான்கு வருடங்களாக நிரந்தர அதிபரின்றி இயங்கிவந்த சம்பூர் அரசினர் தமிழ் மகாவித்தியாலயத்திற்கு திரு. டி. ஜீ. சோமசுந்தரம் அவர்கள் 1-7-68 தொடக்கம் நிரந்தர அதிபராக நியமனம் பெற்றுள்ளார். ஆங்கிலத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் தமது 20வருட சேவையில் இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றியுள்ளார். (உ. தா சதந்)

## சம்பூர் மாணவர் வெற்றி

மூதூர், மே 22

திருகோணமலை மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விவசாய அறிவுப் போட்டியில் மூதூர் வட்டாரக் கல்வி அதிகாரியின் பிரிவிலுள்ள சம்பூர் அ. தமிழ் மகாவித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்று வெற்றிக்கேடயத்தைத் தட்டிக் கொண்டது. (ந நி)

Celebrates 25 years of teaching.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980s ...

## YMCA Trinco — Literary Class Prize Day



Trincomalee Adult Education Officer Mr. D. G. Somasuntharam addresses at the Annual Prize Day of the Literacy Class organized by the YMCA. UC Vice-Chairman Mr. T. P. Subramaniam and D.M.O. Dr. C. C. K. Sellathurai are also seen. (Pic. By V. Varathasuntharam)

"THE ISLAND" WEDNESDAY 23rd MARCH.

ජාතික තරුණ සේවා සභාවේ ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික් කාර්යාලයේ මෙහෙයවීමෙන් ත්‍රිකුණාමලය මුස්ලිම් මහා විද්‍යාලයේ පැවැති ශිබිර සම්මන්ත්‍රණය ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික් තරුණ සේවා නිලධාරි විජේරත්න අතුරුගත, සේරුවිල වැඩිහිටි අධ්‍යාපන නිලධාරි සී. එස්. ජයවර්ධන, ත්‍රිකුණාමලය වැඩිහිටි අධ්‍යාපන නිලධාරි ඩී. ජේ. සෝමසුන්දරගත මහත්වරුන් විසින් පොල්තෙල් පහන් දල්වා විවෘත කළ අවස්ථාව. (ත්‍රිකුණාමලය වාර්තාකරු)

He continued service as Adult Education Officer, Trincomalee district ...

# OPEN A SCHOOL AND CLOSE A PRISON

Sun. 22/12/81

TRINCOMALEE: Sixty per cent of criminals in Sri Lanka prisons are illiterates, according to a survey conducted in this field. So stated the Trincomalee District Adult Education Officer D. G. Somasundaram when presiding over the inaugural ceremony of the Literacy Project in Trincomalee electorate last week.

The literacy project sponsored by the Ministry of Education was inaugurated by the Chief Education Officer E. J. Satkunarajah at the Trincomalee YMCA hall.

Mr. Satkunarajah said that several government departments had appointed officials to promote adult education among their workers. He thanked the voluntary organisations that had come forward to assist the government in this venture.

Trincomalee's Adult Education Officer D G. Somasundaram in his presidential speech stated that the literacy rate in the island was twenty per cent before the free education scheme was introduced. With the introduction of the free education scheme this was completely reversed. Now the literacy rate was eighty per cent. The survey conducted in Sri Lanka prisons had revealed that sixty per cent of the prisoners were illiterates. This statistics had proved that the cause for most of the crimes and violence was due to illiteracy.

Mr. Somasundaram stated that first the country should get rid of illiteracy if it were to get rid of crime and violence. The Education Ministry through the Non Formal Education Branch had sponsored this Literacy Project which was being financed by the IYC Secretariat. Each electorate had been given two thousand and five hundred rupees in this regard. The SEDEC had provided milk powder, Sarvodaya movement Triposha and the YMCA furniture. — (0034).

... organising education and skill development for the underprivileged.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980s ...



A day at school



He was instrumental in developing whichever where he worked.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970s ...

Another decade
as Principal ...



... this time at St. Joseph's
Tamil School, Trincomalee.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980s ...



Another day as A.E.O. After more than 40 years in education he would retire in the late '80s ...



[illegible] — 9-12-81

# குற்றவாளிகளில் படிப்பு வாசனை அற்றவர்களே அதிகம்

## திருமலை மாவட்ட கல்வி அதிகாரி

திருகோணமலை, டிச. 7

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்களில் அறுபது சத வீதமானோர் படிப்பு வாசனை அற்றவர்கள் என்பது ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இடம்பெறும் பெரும்பாலான குற்றச் செயல்கள் படிப்பு அறிவற்ற தன்மையினாலேயே இடம் பெறுகின்றன.

திருகோணமலை மாவட்ட வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. டி. ஜீ. சோமசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் ஆதரவில் வளர்ந்தோர்களுக்கான கல்விப் போதனைத் திட்டம் ஒன்று அண்மையில் திருகோணமலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது சம்பந்தமான அங்குரார்ப்பண வைபவம் திருகோணமலை இளம் கிறிஸ்தவ வாலிபர் சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு. இ. [illegible] சற்குணராஜா திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் பலனை கல்வித் திணைக்களம் மட்டும் அல்ல, ஏனைய அரசாங்கத் திணைக்களங்களும் நன்கு உணர்ந்திருக்கின்றன. இதன் காரணமாக வளர்ந்தோர் கல்வி திட்டத்தை நடைமுறைப்படுத்த தனி அதிகாரிகள் திணைக்களங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர் எனப் பிரதம கல்வி அதிகாரி திரு. சற்குணராஜா தனது ஆரம்ப உரையில் தெரிவித்தார்.

திருமலை வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. டி. ஜீ. சோமசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் முன்னர் 20 சத விகிதத்தினர் மட்டுமே நாட்டில் படிப்பு வாசனை பெற்றவர்களாக காணப்பட்டனர்.

இலவசக் கல்வித் திட்டத்தின் பலனாக இன்று எண்பது சத விகிதத்தினர் கல்வி அறிவு பெற்றவர்களாக விளங்குகின்றனர்.


படிப்பறிவற்றவர்களே பெரும்பாலான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக ஆய்வு ஒன்

... but not before he made a name for himself.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990s ...



For him life starts again at retirement.
He became a pastor at Foursquare Gospel Church ...



... and would become an inspirational force.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPRECIATION

I consider it as a great privilege to write a few words in honour of a great hero of faith in the Foursquare family.

I met Pastor Daniel Somasunderam around April of 1983. My first impression of him, was that he was a man of wisdom and humility . At the time I first met him he was an education officer. In 1984, I had the privilege of visiting his home in Sampur when I visited Mutur to conduct a city wide evangelistic rally. I was deeply impacted by his wonderful Christian family. During this time my children were very small. The thought that went through my mind at that time was, "I would sacrifice anything to have such a wonderful family. The way Pastor Somasunderam functioned as a husband and a father was a tremendous blessing and an eye opener to me.

With great compassion, vision and strategy he reached out to the lost. With fatherly love and gentleness he pastored God's flock entrusted to him . With arduous preparation and articulate skill he taught God's flock . With precision and discipline he trained and equipped the called out ones to go out and gather in the harvest. For many years Pastor Somasunderam rode many, many miles on a Honda C70, through security checks, under the blazing heat of the sun. He did this when he was well into sixties. He served God under very trying conditions, but never a grumble did we hear. He fulfilled his ministry responsibilities with great determination and resolve.

He pastored, fulfilled the work of a great apostle and provided leadership as an elder statesman in the church. He was a Church planter of great class in that he planted 35 churches in the Eastern Province. He led the Eastern Province ministry to great fruitfulness, there was at least 150% growth during his tenure as Regional Supervisor. He was responsible for launching out over 25 young ministers into the Ministry.

Pastor Somasunderam as a member of our national board always brought in a mature balance to our discussions. He was a man of uncompromising convictions, soft spoken and humble. He varied responsibilities kept him busy that he did not have much time to use his great writing skills. However, the little he wrote and the poems he composed are of high quality. Until his retirement, Pastor Daniel Somasuderam laboured untiringly, in spite of his age and health impediments. Even after his retirement in December 1999, in the days of his '' after glow" he continued to be an influence of strength and maturity to the Foursquare family.

We are saddened by his home going, but thank God for lending him to us for this short period of time. Because of his Godly influence on our lives, we have become better equipped.

**Leslie Keegel**
**President**
**Church of the four Square Gospel**
**Colombo, Sri Lanka.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TRIBUTES FROM OVERSEAS PALS :

Oh, George,

I feel with you at the time of your father's home going. But you and I both Know we shall see our fathers again. What a blessed hope - they have already realized this hope.

Please give my love to your mother too the Lord reminds me to pray with and for you at this time.

Maam Elaise

---

Dear Leslie

Received the news of the homegoing of pastor Somasundaram with sadness and joy. what a special man he was and I knew he was a close ally and brother to you I can only imagine the great reward he has in heaven when I think that he planted some 35 churches in the country of Sri Lanka.

Would you remind his wife and family, and particularly pastor George, that the Foursquare Church around the world mourns and rejoices at Daniel's passing and we pray that God will forever seal the example of his into our hearts so that we might be challenged to serve the Lord with greater Zeal

and sacrifice. "His works will follow him"

Thanks again brother Leslie for making us aware of this loss. We will certainly be in prayer for you and all the church of Sri Lanka.

Yours in Christ,
paul Risser

---

To George,

I just heard about your father. I am so sorry. He was always very kind and thoughtful to me. it is a great loss for you and your mom. it is also a great loss for the church of Sri Lanka. Our prayers are with you.

Love,
Pastor Bill Burnett

---

To Paster Niranjan & Family

It is with great sadness that I received the news of the homegoing of your father I was given the privilege of meeting with him as the Lord brought us into the Foursquare family in Sri Lanka. It was also a privilege to sit with him at Council and leadership meetings. He was a gentle soft spoken man who demonstrated the Fruit of the Spirit.

Please accept our sympathies and pass them over to Rajini and the rest of the family. Now he is in glory he has run the race to the end fought the good fight praise be toour Lord.

Ps. Lanil, Ingrid and the family.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்புக்குரியவரே,

உங்களுக்கென்ன? நீங்கள் தேவ சமூகத்திலே ஒரு கவலையுமில்லாமல் ஆடிப்பாடித் துதித்துக்கொண்டிருக்கிறீர்கள். நான் இங்கே நடந்தவற்றை ஒவ்வொன்றாய் நினைத்துப் பார்க்கிறேன் நாற்பத்தி நாலு வருடங்களுக்கு முன்பு ஆவணி 22ம் திகதி நடந்த நமது திருமணத்தை ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன். நமது காதல் 6 மாதமே, அக்காலத்தில் சட்டங்கள் மிகக் கடுமையாக இருந்தன. ஏற்கனவே எனது வளர்ப்புத் தந்தையார் திரு. சிப்பிரியான் பொன்னான்டோ செய்துவைத்திருந்த ஏற்பாடுகளையெல்லாம் சதிகாரர் கடைசி வேளையில் மாற்றிக்கொண்டனர். திருமணக்கோலத்தில் நான் கண்ணீரோடும், எனது வளர்ப்புத் தந்தை மயக்கமுற்ற நிலையில் இருப்பதைப் பார்க்கச் சகிக்காத நீங்கள் தனியாக முடிவெடுத்தீர்கள் வந்த உறவினர். கோபத்துடன் திரும்பிச் சென்றுவிட்டனர். பெற்றோரும், ஒரு சில நெருங்கிய உறவினர் மட்டுமே குருவானவரின் சாப்பாட்டுமேசையில் (தன்னாமுனையில்) நடந்த திருமணச் சடங்குகளில் பங்கெடுத்தனர். அன்று தொடக்கம் எங்கள் குடும்பத்தில் நீங்கள் ஓர் உன்னத ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டீர்கள் கடைசி வரை அதைப் பாதுகாத்தும் கொண்டீர்கள். தன்னலம் கருதாது பொறுமையுடன் சிந்தித்து அமைதியுடன் முடிவு எடுப்பீர்கள் 40 வருட சமூகத்திற்கான சேவையில் கற்பித்த இடங்களில் சிங்களவர், முஸ்லிம், தமிழர் என்ற வேறுபாடு இல்லாமல் திறம்பட உழைத்து, கல்வியூட்டி திறன்களை அபிவிருத்தி செய்து, ஒழுக்கத்தை கடைப்பிடித்து. குடும்ப நலன்களில் அக்கறை காட்டினீர்கள். உம்மாலே பயிற்றப்பட்டு, வாழ்க்கையில் வளம் பெற்று முன்னேறியவர்கள் ஆயிரம் ஆயிரம். ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாமல் யாவரையும் நேசித்து, உதவிசெய்து ஆலோசனை கொடுத்து உயர்த்தினீர்கள்

ஐயா, நமது வாழ்க்கை ரோஜா மலர் படுக்கையாய் இருக்கவில்லை. முதல் இருபது வருடங்களிலும் எத்தனையோ உபத்திரவங்கள். ஆறுகுழந்தைகளைப் பெற்றோம். பிள்ளைகள் நமக்கு பாரமாயிருக்கவில்லை. கீழ்படிவுள்ள, ஒழுக்கமுள்ள பிள்ளைகளாக பயிற்றுவித்தீர்கள் நமது வீடு ஒரு பல்கலைக்கழகம் அப்பா. வியாதிப்பட்டோம், வேதனைப்பட்டோம். எத்தனையோ முறை மரணம் நம்கதவைத் தட்டியது. தேவனுக்கு ஒரு நோக்கமிருந்தபடியால் நம்மை பாதுகாத்தார். கடன்பட்டோம். ஆனால் நமது அன்பு குறையவே இல்லை. இலங்கை முழுவதையும் சுற்றிவந்திருக்கிறோம் நமக்குள் பிரச்சினைகள் வராமலில்லை. ஆனால் பேசித்தீர்த்துக்கொள்வோம். ஒளிவுமறைவு இல்லாமல் பகிர்ந்து கொள்வோம். நமது கோபம் ஒரு சில நிமிடங்களுள் மாயமாகி மறைந்துவிடும். ஏன் ஐயா ? அது உமது பொறுமையில். நான் வார்த்தைகளைக்கொட்டினாலும் மௌனமாக, புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்வீர்களே அதே புன்னசிரிப்பு கடைசி நேரம்வரை உம்மிடம் இருந்ததே. உமக்குத் தெரியாதது. என்று சொல்ல ஒன்றுமே இல்லை.

57 பெருவெள்ளம், 64 கோரப்புயல் எதுவும் உங்களை அசைக்கவில்லை நானும் பிள்ளைகளும் சம்பூரில் நமது வயலில் களைபிடுங்கும் போது பெரிய ஜமீந்தார் போல செருப்புடன் குடையும் பிடித்து வரம்பில் நின்று ரசிப்பீர்களே ஆனால் இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டைக்காரனைப் போல, கோட், பூட்ஸ் அணிந்து தோளில் துவக்கும் தலையில் ரோச்சும் கட்டி வயல் காவல் பார்ப்பீர்களே. வயலையும் சோளம் சேனையையும் நாசம்செய்த பன்றிகள் உமது குறிக்குத் தப்பவில்லையே.!

ஆனால் 76ம் ஆண்டில் நமது இரட்சகரை ருசிக்க ஆரம்பித்தபின் நமது வாழ்க்கையே மாறிப்போனது தேவ ராஜ்சியத்தை பரப்புவதே உமது தாகமாயிருந்தது. குடும்பமாக நாம் தேவனை தேடினோம் பிள்ளைகளுக்காக நாம் சேர்த்துவைத்த ஒரே சொத்து தேவ அன்பு, தேவனுக்கு பயந்த பிள்ளைகளாக ஆலோசனையோடு வளாக்கப்பட்டார்கள். நாம் சண்டைபிடிப்பதை கண்டிருக்கமாட்டார்கள் அப்பாவின் முன்மாதிரியை பின்பற்றுகிறார்கள். மூத்த மகனை ஊழியத்திற்காக தேவன் அழைத்தபோது மனமுவந்து அர்ப்பணித்தீர்களே. எல்லா பிள்ளைகளுக்கும் முடிந்தளவு கல்வியூட்டி, இரண்டு வைத்தியர்களையும் உருவாக்கினீர்களே ஐயா. இதற்காக எப்போதும் தேவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டிருப்பீர்களே.

87, 90ம் ஆண்டுகளில் இடம்பெற்ற வன்செயல்களினால் வீடு,வாசல், பொருள், பண்டம் யாவும் அழிந்தாலும் நீங்கள் அசையவில்லையே எதற்கும் கவலைப்படமாட்டீர்கள். தேவனுக்கென்று முழுநேர ஊழியத்தில் ஈடுபட்டபோது தேவன் உங்களை வாலாக்காமல் தலையாக்கி வைத்தார். ஆனால் நீங்கள் அதிகாரம் செலுத்தவில்லையே. அன்பினால் ஆலோசனை வழங்கிவந்தீர்கள் தேவ ராஜியம் புசிப்பும் குடிப்புமல்ல என்பதை நிருபித்தீர்கள் வன்செயலால் இடம் பெயர்ந்த மக்களுக்குத் தனிப்பட்ட ரீதியில் உதவினீர்கள். இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள வழி நடத்தினீர்கள் ஐயா, கொழும்பில் வசதியாக வாழ்க்கை ந டத்திய வேளையில் கிழக்குமாகாணத்தில் மக்கள் படும் துன்பத்தைக் காணவில்லையா?

அழிந்து போகும் சனங்களின் அவலக்குரல் கேட்கவில்லையா தேவனின் மெல்லிய சத்தம் கேட்டபோது எல்லாவற்றையும் உதறிவிட்டு மட்டக்களப்பு நோக்கி வந்தீர்களே ஐயா. அரசாங்கம் ஓய்வு தந்த போதும், இளைப்பாறும்படி, திருகோணமலை தொடக்கம் பொத்துவில் வரை ஓடி, ஓடி உழைத்தீர்களே. சின்ன உல்லை கண்ணகிபுரம் அக்கரைப்பற்று எல்லாம் உமது காலடியில் வசதியற்ற படுக்கைகளால் நித்திரை அற்ற இரவுகள் எத்தனை.உன்னிச்சை, கரவெட்டி ஆறு, இராசதுரை நகர் ஆயித்தியமலை, பாவற்கொடிச்சேனை, உறுகாமம், மரப்பாலம், கரடியனாறு எல்லாம் உமது காலடி படாமல் இல்லை. பனிச்சன்கேணி, வரை போயும் உமது தாகம் அடங்கவில்லை. எவ்வளவு எதிர்ப்புக்கள், கல் எறிதல், வாள் வீச்சு உமது உயிரையே பணயம் வைத்தீர்களே. தீயூட்டப்பட்ட 'மாவடிவேம்பு' முகாமுக்கு போக தெருவில் இரு மருங்கிலும், அணிவகுத்து நின்ற கவச வாகனங்கள், இராணுவத்தினர் நடுவாக ஆராதனைக்காக கம்பீரமாக காரையோட்டிச் சென்ற உமது துணிவை எப்படி வர்ணிப்பேன்! வாழைச்சேனையில் முஸ்லிம் கலவரம் எரியூட்டப்பட்ட மனித உடல்கள் நடுவில் நாமிருவரும் வெறிச்சோடிக்கிடந்த தெருவில் வந்தோமே ஞாபகம் உண்டா? ஆராதனை நடக்கும் வேளைகளில் தொடர்ச்சியாக கற்கள் விழுந்தாலும் ஏதும் நடவாதது போன்று அமைதியாக செய்தியை பகிர்ந்தளித்துச் சபையோரையும் திடப்படுத்தினீர்களே. ஒருமுறை பாலத்தோப்பூருக்கு அல்லை கந்தளாய் பாதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறுக்கும் மேற்பட்ட யானைக்கூட்டம் தெருவைக் கடந்து செல்வதை ஆவலுடன் ரசித்து, முன்னேறும் வேளையில் மறைந்து நின்ற ஒரு யானை தாக்க முற்பட்ட போது மயிரிழையில் காத்தாரே. அது மட்டுமா? அன்றிரவு நேரங்கடந்தபடியால், இராணுவத்தினர் போக அனுமதிக்காதபோது, தெருவோரத்தில் நமது நற்செய்திக் குழுவினருடன் படுக்கைகள் ஏதும் இல்லாமல் இரவைக் கழித்தோமே. உமது வாயில் இருந்து ஒரு முறுமுறுப்பு வந்ததா? நீர் எனக்கு கண்கண்ட தெய்வமையா. உம்மிடம் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் எத்தனை, எத்தனை. ஆனாலும் உம்மாலே நேசிக்கப்பட்டவர்கள் மத்தியில் உமக்கு எதிர்ப்பு எழும்பத்தான் செய்தது. ஏன்? நீர் ஓய்ந்திருக்க விடுவதில்லையே! உமது வாஞ்சை, தாகம் எல்லாம் தேவராட்சியம் வளருவது. எதையும் தாங்கும் இதயத்தை தேவன் உங்களுக்கு கொடுத்திருந்தாரே!

ஐயா, எழுதுவதனால் என் வாழ்நாள் எல்லாம் எழுதிக் கொண்டே இருக்கலாம். உங்கள் பிரிவால் உண்டான வெற்றிடத்தை நிரப்ப எவராலும் முடியாது. நீங்கள் கடைசி நாட்களில் ஜெபித்தபடி நீதியின் கிரீடத்தை அந்த வாடாத கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள உம்மைத் தம் ஊழியத்துக்கென்று அழைத்தவர் கூப்பிட்ட உடனேயே சென்று விட்டீர்கள். இணைபிரியாது இருந்த என்னை விட்டுப் போய் விட்டீர்கள். என்னைக் கூட்டிச் செல்லக் கூடிய வல்லமை உங்களுக்கு இருந்திருந்தால் நிச்சயம் என்னையும் அழைத்துப்போய் இருப்பீர்கள். நீங்கள் தேவ சமூகத்தில் இவ்வுலக க்கவலைகள் பாடுகள் என்பன இல்லாமல் அவரைத் துதித்துக் கொண்டிருக்கிறீகள். உங்களை முக முகமாய் காணும் அந்த இன்ப நாளுக்காக நான் ஏக்கத்தோடு, உங்களோடு வாழ தேவன் தந்த 44 வருடங்களுக்காக தேவனை துதித்துக் கொண்டு காத்திருக்கின்றேன்.

உங்களை மறக்க முடியாத
உங்கள் அன்புக்குரிய மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மகளின் இதயக் குமுறல் ஒன்று

மீண்டும் மீண்டும் "அப்பா" "அப்பா" என்று அழைக்கின்றேன்! பதில் இல்லையே. "மகள்" என்னும் அந்த அன்புக் குரலை இனி எப்போ கேட்பேன்.

ஒருநாள் சந்திக்கலாம் தானே என்று பலரும் என்னைத் தேற்றுகிறார்கள் - உண்மைதான் அப்பா! ஆனாலும் உங்களின் திடீர் மறைவு எம் குடும்பத்திற்கு ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பு. இன்னும் ஒரு தடவை அப்பா என்று அழைத்து இன்று வரை நீங்கள் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்கும் என் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றிகள் பல கூறுகின்றேன்.

ஒன்று மட்டும் உண்மை என் இதயம் விரும்புவதை இப்போது எழுத்தில் வடிப்பது முடியாத காரியம் என் இதயம் எழுதுவதோ சமுத்திரம், ஆனாலும் என் கரம் எழுதுவதோ அதில் ஒரு துளி மட்டுமே, அப்பா! பெற்றெடுத்து, பேணிக்காத்து, கல்விச் செல்வம், தர இடைவிடாது. உழைத்து, உங்களின் அனேக நலன்களை இழந்து, அவை யெல்லாவற்றையும் எனக்கு ஈந்து அப்பாவாக மட்டுமல்ல எதுசரி எதுபிழை என்று வழிகாட்டும் நல்ல ஆசானாகவும், தேவனுக்குப் பயப்படும் பயத்தில் வளர்க்கும் நல் போதகராகவும் திகழ்ந்தீர்களே!

அப்பா, உங்கள் அன்பு, தியாகம், நற்பண்புகள் வார்த்தைகளுக்குள் அடங்காதவைகள். இப்படியான உங்களை நான் அப்பாவாக பெற்றதையெண்ணி பெருமிதம் அடைகின்றேன். அதேவேளை என் தேவனுக்கும் கோடானகோடி நன்றிகள் கூறுகிறேன்.

அப்போஸ்தலர் 13: 36 ல் கூறப்பட்டுள்ளபடி "உங்களுக்குத் தேவன் தந்த காலத்தில் தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய ஊழியத்தை நிறைவேற்றி முடித்திருக்கிறீர்கள். நாங்களும் உங்களுடையதும், தேவனதும் விருப்பப்படியான இவ்வழி தொடர்வோம். இதுவே நாங்கள் தரும் கைமாறு.

மீண்டும் மகிமையில் நாம் முகமுகமாய் சந்திக்கும்வரை அப்பா, என் இதயம் உங்களை நினைத்து அழுதுகொண்டேயிருக்கும்.

**"I love you so much."**

என்றும் உங்கள்
அன்புக்குள் ஊறிக்கிடக்கும் அன்பு மகள்
சுசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் என் அப்பாவும்

மரங்களுக்குள்ளே கிச்சிலி எப்படியோ அப்படியே அப்பாக்களுக்குள்ளே என் அப்பா எனக்கு விசேஷித்தவர்.என் சிறு பராயத்தில் எனது தாயாரின் தாயாருடனும்.பாடசாலை விடுதியிலும் தங்கியிருந்தபடியினால் என் பெற்றோரின் அன்பை உணராதவனாகவிருந்தேன்.ஆனால் 18வது வயதில் என் இரட்சகர் இயேசுவை ஏற்றுக் கொண்டதின் பின்னர் அவர்களின் மதிப்பை,அன்பை உணர தேவன் கிருபை செய்தார்.வாழும்போதே அவரது மதிப்பை உணர்ந்த படியினால் இதை தைரியமாய் எழுதுகின்றேன்.என் அப்பா என் வாழ்வில் பதித்த அச்சடையாளங்கள் ஆழமானவைகள் நித்திய பெறுமதியுள்ளவைகள்.அவற்றில் ஒரு சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

## தாலந்துகள்

என் அப்பாவை தேவன் தாராளமாகவே தாலந்துகளால் நிறைத்திருந்தார். அவர் ஒரு கவிஞர்,எழுத்தாளர்,பேச்சாளர் மாத்திரமல்ல சிறந்த கைப்பணிப் பொருட்கள் செய்பவராகவும் விளங்கினார்.நாடகங்களை எழுதுபவராக மட்டுமல்ல நடிகனாகவும் விளங்கியதோடு விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்தார். அவர் ஒரு ஓவியனாகவும் வியங்கினார் என்பது அநேகர் அறியாத உண்மை. தேவ சிருஷ்டிப்பை வரைவதே அவரது பிரதான விடயமாயிருந்தது. அத்துடன் ஒரே நேரத்தில் பல விடயங்களை அவதானிக்கும் திறமையும் அவரிடத்திலிருந்தது. பேப்பரையும் வாசித்துக் கொண்டு, வானொலியில் கிரிக்கட் வர்ணனையையும் கேட்டுக் கொண்டு, நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கும் சரியான பதிலைக் கூறவும் கூடியதாகவிருந்த அவரது திறமையைக் குறித்து நான் அவரை வர்ணிப்பது அட்டவதானியென்று.

## பொறுமையும் நம்பிக்கையும்

இன்று நான் இருக்கும் நிலையிலிருப்பதற்கு அவர் என் மேல் வைதத நம்பிக்கையும், காட்டிய பொறுமையுமே காரணம். பல கஷ்டங்களின் மத்தியிலும் எனக்கு கல்விபுகட்ட அதிக செலவில் என்னைக் கல்லூரியில் சேர்த்தார் ஆனால் நானோ படிப்பிலும் பார்க்க விளையாட்டிலேயே அதிக கவனம் செலுதினேன்.பரீட்சைக்குச் சமுகமளிக்காமல் விளையாடச் சென்றேன், இருந்தும் என்னை ஒதுக்காமல் எனக்கு கல்விபுகட்டியதால் இன்று நான் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்கக்கூடியதாயிருக்கின்றது.

## கண்டிப்பு

ஒழுக்கரீதியான விடயங்களில் அவர் மிகவும் கண்டிப்பானவர்,ஆனால் அதற்காக எப்போதும் எங்களைத் தண்டிக்கவில்லை. அவர் தண்டிக்கும்போது ஏன் தண்டிக்கிறார், நாங்கள் எதைச் செய்யக் கூடாது என்று சொல்லியே தண்டித்தார்.இன்றும் அவர் என்னைத் தண்டித்த ஒவ்வொரு சந்தர்ப்பமும் எனக்கு ஞாபகமிருக்கின்றது. எனது 8 வது வயதில் நகரசுத்தி தொழில் செய்த வயோதிபர் ஒருவரை நான் "நீ" என்று சொன்னதிற்காக அவ்வயோதிபர் முன்னிலையிலேயே தண்டனை பெற்றது இன்று வயது முதிர்ந்தவர்களை மதிக்கவும் இனரீதியாகவோ,தொழில் ரீதியாகவோ மக்களை எடைபோடாமல் அவர்கள்ளை மக்களாக மதிக்க எனக்கு கற்றுத் தந்திருக்கிறது.

## நற்பழக்கங்கள்:

நான் அறிந்த பராயமுதல் என் அப்பா குடி,புகைத்தல்,வெற்றிலை பாவித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பழக்கங்களுக்கு அடிமையாயிருக்கவில்லை. மூதூர் விளையாட்டு கழகத்தில் அவர் தன் நண்பர்களுடன் நேரம் செலவிட்ட சந்தர்பங்கள் பலவற்றில் நானும் உடனிருந்திருக்கிறேன், அங்கு எல்லோரும் குடிக்கும் போது என் அப்பாமட்டும் எல்லோரிலும் வேறுபட்டவராகவிருந்திருக்கிறார். அவருடன் வேட்டைக்குப் போகும்படியாக வீட்டிற்கு வந்த நண்பர்களும், சில மதகுருமார்களும் கூட குடித்தபோதும் என் அப்பா மதுவை தொடாமலிருந்ததை கண்டபடியினால் அவரைக் குறித்த மதிப்பு என் இதயத்தில் உயர்ந்தது மாத்திரமல்ல, என் வாலிப நாட்களில் இப் பழக்கங்கள் என்னை அணுகவிடாது காக்க அவரது பண்பு எனக்கு உதவியது.

## குடும்பம்

என் வீட்டில் அப்பா அம்மாவிற்கு எல்லாவிதங்களிலும் உதவிசெய்வார். ஆணின் வேலை பெண்ணின் வேலை என்ற வேறுபாடு இருக்கவில்லை. தேவையானபோது சமைப்பார், பிள்ளைபார்ப்பார், கூட்டுவார், துவைப்பார் இப்படியெல்லாம் அவர் செய்தபடியினால் இன்று என் குடும்பத்தில் என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நான் ஒத்தாசையாயிருப்பதுடன், மற்றவர்களுக்கும் போதிக்கவும் கூடியதாயிருக்கிறது. மேலும் என் சிறுவயது முதல் அவர் கர்த்தருக்குள் நித்திரையடையும் வரைக்கும் என் தாயாருடன் அவர் சண்டை பிடித்ததை நான் காணவில்லை. அதனால் என் குடும்பத்தில் பிரச்சினையே வரவில்லை என்று நான் கூறவில்லை ஆனால் பிரச்சினைகளை அவர்கள் தனியாக பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பத்தில், தீர்த்துக் கொண்டார்கள். இதையே இன்று எங்கள் குடும்பத்தில் நானும் என் மனைவியும் கடைப்பிடிக்க விளைகிறோம்.

## ஆசீர்வாதம்

என் குடும்பத்தில் நான் இரண்டாவதானாலும் நான் ஆண்மகன், எனக்கென்று பல குடும்பப் பொறுப்புகள் இருந்தன. இவற்றை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் நான் வெளிநாடு போக ஆயத்தம் செய்தபோது தேவன் தம் ஊழியம் செய்யும்படி என்னை அழைத்தார். இதை அறிந்த என் அப்பா எவ்வித மறுப்பும் தெரிவியாமல் என்னை கொழும்புக்கு அழைத்துச் சென்று வேதாகம பாடசாலை போதகரிடம் என்னைக் கையளித்து இவ்விதமாக ஜெபித்தார் "ஆண்டவரே முதலாவது ஆண் தலையீற்றுக்களெல்லாம் எனக்குச் சொந்தம் என்று சொன்ன உமது வார்த்தையின் படி என் மகனை உமக்கு கையளிக்கிறேன் ஏற்றுக்கொண்டு அவனை ஆசீர்வதியும், எங்களையும் ஆசீர்வதியும்□. அன்றிலிருந்து எக்குடும்பப் பொறுப்பையும் என் மேல் அவர் சுமத்தவில்லை. மேலும் அவரது ஜெபத்தின்படியே கர்த்தர் என்னை இந்நாள் மட்டும் ஆசீர்வதித்து வருகிறார், என் குடும்பத்தையும் ஆசீர்வதித்திருக்கிறார்.

நான் வேதாகம பாடசாலையில் பட்டம் பெற்று ஊழியத்திற்கு புறப்பட்டபோது என்னைத்தாங்க ஒரு சபையுமிருக்கவில்லை, நாங்கள் மூன்று பேர் எவ்வித உதவியோ, வாக்குறுதிகளோ இன்றி அப்பாவின் அனுமதிக்காக அவரிடம் வந்தபோது அவர் சொன்ன வார்த்தைகளை என் காதுகளால் நம்ப முடியவில்லை. "நீ மூன்று பேரை மாத்திரமல்ல பத்து பேரையாவது கூட்டிக் கொண்டு போ எலியாவின் தேவன் உன்னைப் போஷிப்பார்". அவ்வேளையில் அனுமதி கிடைத்த மகிழ்ச்சியால் அவ்வார்த்தைகளை குறித்து நான் அதிகமாய் சிந்திக்கவில்லை. ஆனால் ஊழியத்தில் இரண்டு வருடம் பூர்த்தியானபோதுதான் என் அப்பாவின் வார்த்தைகள் தீர்க்கதரிசனமானதாக மாத்திரமல்ல முற்பிதாக்களின் ஆசீர்வாதத்திற்கும் ஒப்பானவைகளாயிருந்திருக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனை உணர்ந்தேன். நாம் கல்லாற்றுக்கு ஊழியத்திற்கு போனபோது ஒரு வயோதிப விதவையினால் ஆறு மாதங்களுக்கு இலவசமாக போஷிக்கப்பட்டோம். இவ்வாறுதானே எலியாவும் போஷிக்கப்பட்டான். இது எனக்கு இரண்டு முக்கிய பாடங்களை போதித்தது. ஒன்று பழையேற்பாட்டில் சொல்லப்பட்டபடி பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது இன்றும் அது நிறைவேறும். இரண்டாவதாக பிள்ளைகளை பெற்றோர் சபிப்பதை விடுத்து அவர்களின் எதிர்காலத்தைக் குறித்து விசுவாசமுள்ளவர்களாய் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். இது சகலருக்கும் ஒரு முன்னுதாரணமான காரணமாகும்.

## முன்மாதிரி

ஊழியத்தில் என் தகப்பனுக்கு மேற்பார்வையாளராகவிருக்கும் ஒரு இக்கட்டான சூழ்நிலை எனக்கு ஏற்பட்டிருந்தது, இதைக் குறித்து என் உள்ளத்தில் ஒரு நெருடல் எப்போதும் இருந்து கொண்டேயிருந்தது, ஆனாலும் என் அப்பா அதை பெருமையாக எண்ணியது மாத்திரமல்ல எனக்கு எல்லாவிதங்களிலும் தன் ஆதரவை நல்கி என்னைத் தாங்கி எனக்கு ஒத்தாசையாகவிருந்தது மாத்திரமல்ல சகலருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

## திருமண தகமை

நான் திருமணம் செய்ய விரும்புகிறேன் என்று அவருக்கு எழுதியபோது அவர் பெண்ணைப் பார்க்கவோ அல்லது அவளுடன் பேசவோ முன்னர் அவள் இயேசுவை ஏற்றுக்கொண்டவளாயிருப்பதினால் அவளுக்கு உன்னைத் திருமணம் செய்ய தகுதி உண்டு என் அனுமதியும் உண்டென்று எழுதினார். என் அப்பாவிற்கு ஆவிக்குரிய தகமைதான் முக்கியமும் ஓரேயொரு தகுதியாகவும் இருந்ததேயல்லாமல் சீதணமோ,குடும்பப் பின்னணியோ,சாதியோ,படிப்போ,ஜாதகப் பொருத்தமோ முக்கியமானதாயிருக்கவில்லை.இது அவர் எவ்வளவுதூரம் இயேசுவை நேசித்தார் என்பதற்கு சிறந்த சான்று.

## நண்பன்

என் அப்பா எனக்கு ஆசானாய்,விளங்கியது மாத்திரமல்ல நண்பனாகவும் விளங்கினார். ஏனது வேதாகம பாடசாலை நண்பர்கள் வீட்டிற்கு வந்திருந்தபோது என் அப்பா என்னுடன் பழகியதைப் பார்த்து இவர் உன் அப்பாவா? அல்லது மச்சானா? என்று கேட்டார்கள். அவர் எங்களுடன் விளையாடுவார், கேலிசெய்வார், கேலியைப் பொறுத்துக் கொள்வார்.தைரியமாய் அவருடன் பேசலாம். அவர் ஒரு உற்ற நண்பன்.

இன்று என் வாழ்வில் புங்கேற்க சரீரத்துடன் இல்லாவிடினும் அவர் பதித்த அச்சடையாளங்கள் எனக்குள்ளே வாழ்கின்றன. தேவன் எனக்குத் தந்த அப்பாவுக்காக அவருக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உண்டாவதாக.

மகன் ஜோர்ஜ் நிரஞ்சன்,
உபதலைவர்,
நாற்சதுர சுவிசேஷ சபை,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா

அப்பா, இன்று உங்களை குறித்த ஞாபங்கள் மட்டுமே எஞ்சி நிற்கிற நிலையில், தனிமையில் இருக்க நேரிடும் போதெல்லாம் பின்நோக்கி போகின்றேன்.

அப்பா: அம்மாவின் வயிற்றில் குழந்தையாய் நான் உருண்டு புரளும் போது அம்மாவின் வயிற்றில் கை வைத்து என் அசைவை உணர்ந்து சிலித்திருப்பீர்கள். அம்மாவின் வயிற்றிலிருந்து நான் வெளி வந்த அடுத்த சில மணிநேரத்திலேயே என்னைத் தூக்கி உச்சி முகர்ந்திருப்பீர்கள்.

உங்கள் மடியை நான் அசுத்தப்படுத்திய போதெல்லாம் முகம் சுளிக்காமல் என்னைச் சுத்தம் செய்து இருப்பீர்கள். அப்பா நினைவு தெரிந்த நாள் முதலாய் உங்களைப்பார்த்து வியந்திருக்கிறேன். பகலில் பாசமிகு அப்பாவாய், இரவில் வேட்டைக்குப் போகும் வீரனாய், களைபிடுங்கும் வயலில் குடையுடன் ஜமீந்தார் போல் பாடசாலையில் கண்டிப்பான அதிபராய் அப்பா உங்களில் எத்தனை பரிமாணங்களை கண்டிருக்கிறேன். இலங்கை முழுவதும் பயணம் செய்தபோது எடுத்த உங்கள் அபூர்வமான புகைப்படங்கள் புகைப்படக் கலைஞராக அடையாளம் காட்டியது. உங்கள் மடியில் அமர்ந்து இந்த புகைப்பட அல்பத்தைப் பார்த்து விளக்கம் கேட்பது எனக்குப் பிடித்த பொழுது போக்காய் இருந்தது. பிறகு 90ல் நடந்த கலவரங்களின் போது எரியுண்ட நமது வீட்டில், மற்ற எல்லாவற்றையும் விடவும் எனது திருமண வீடியோ பரிசுப் பொருட்களைவிடவும் நான் மிகவும் நேசித்த அந்த இரண்டு அல்பங்களும் எரியுண்டது தான் மிகப் பெரிய சோகம்

அப்பா நாம் கடலில் குளிக்கவென போகும்போதெல்லாம் என்னை தோளில் தூக்கிச் சென்று நீச்சல் பழக்குவீர்கள், சம்பூர் வீதிகளில் அம்மா ஏறாத நேரமெல்லாம் உங்கள் சைக்கிள் பாரில் நான் ஏறுவேன், அப்பாவின் பிள்ளை என்பதில் எனக்கு அப்படியொரு பெருமை.

அப்பா உங்களுடன் எங்காவது பயணம் போவதென்றாலே எங்களுக்கெல்லம் கொண்டாட்டம்தான், ஒவ்வொரு இடத்தையும், அதன் வரலாற்றுப் பின்னணியுடன் விளக்குவீர்கள் உங்கள் பக்கத்தில் யார் அமர்வது என்று எங்களுக்குள் சண்டை போடுவோம்.

அப்பா இலக்கியத்தில் உங்களுக்கிருந்த ஆர்வமும், திறமையும் எங்களுக்கு இல்லாமல் போனது எங்கள் துரதிஷ்டமே. சம்பூர் மகாவித்தியாலயத்தில் நீங்கள் கம்பராமயாண வகுப்பு எடுத்துக் கொண்டு இருப்பீர்கள் வகுப்பே அமைதியாக இருக்கும், நான் 2, 3ம் வகுப்பில் படித்துக் கொண்டு இருந்த காலமது நீங்கள் கற்பிக்கும் சத்தம் கேட்டால் நான் பின்னால் நின்று கேட்பேன். அப்பா நீங்கள் ஒரு ஓவியக் கலைஞன் என்று தெரிந்து வியந்து போனேன், நீங்கள் செய்து வைத்திருந்த எத்தனையோ அழகான கைவேலைப் பொருட்களையும், ஓவியங்களையும், உங்கள் சங்க இலக்கியங்களையும் வேறு எத்தனையோ இலக்கிய நூல்களையும் சேர்த்தே நம் வீட்டுடன் எரியூட்டினர்.

அப்பா..... இன்று சம்பூர் வீட்டில் இருந்தவற்றைவிடவும் அதிகமான பொருட்களை வாங்கினோம், நவீன மின்சார சாதனங்களையும் வாங்க முடிந்தது ஆனால் அப்பா, எங்கள் இளமைக்காலத்தைப் பிரகாசமானதாய் மாற்றிய, உங்கள் பொருட்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை இலட்சம் கொடுத்தாலும் வாங்க முடியாமல் போனது.

அப்பா நான் பிறந்த பின் தான் கிரிக்கட் விளையாடும் போது உங்கள் முள்ளந்தண்டில் பாதிப்பு ஏற்பட்டது, அதன் பிறகு தான் உங்கள் காரை விற்றீர்கள். உங்கள் சுகயீனத்தால் நம் குடும்பம் அலைக்கழிக்கப்பட்டது. நான் ராசியில்லாதவள் என்று சித்தியம்மா சொன்ன வேளைகளில் இல்லை மகள் நீ எனக்கு எப்பொதும் அருமையானவள் தான் என உணர்த்தினீர்கள்.

நானும் ரஜினியும் கைது செய்யப்பட்டபோது நீங்கள் எங்களுக்காக அழுதபடி எங்கெல்லாமோ சென்றீர்கள். அப்பா எங்கள் அறுவரையும், படிப்பிக்க, வளர்க்க உங்களைத் தியாகம் செய்தீர்கள் நாங்கள் கேட்டது எதையும் மறுக்காமல் செய்தீர்கள்.

யாழ் பல்கலைக்கழகத்தில் முதல் நாள் என்னை அம்மாவும், நீங்களும் அழைத்துச் சென்றபோது என்னுடன் சேர்ந்து "ராகிங்" வாங்கியதை சிரித்தபடி எங்லோருக்கும் சொன்னீர்கள்.

அப்பா எங்களைப் படிப்பிப்பதற்காக உங்களுக்குப் பிடித்த சம்பூர் வீட்டையும், கிராமத்தையும் விட்டு திருமலை வந்தீர்கள் பிள்ளைகளுக்காக எதையும் செய்தீர்கள் அப்பா இன்று என் மகள் சொல்கிறாள் நான் தங்களின் மகளாகப் பிறந்திருக்கலாமே என்று அப்பேர்பட்ட அப்பா நீங்கள்

அப்பா தேவ ஊழியனாக உங்களை அர்பணித்த பின்பு ஏற்கனவே உங்களிடமிருந்த நல்ல குணங்கள் இன்னும் மெருகூட்டப்பட்டது. உங்களுக்கு Gossip பிடிக்காது. ஆதாரமில்லாமல் எதையுழ் பேசுவதை அனுமதிக்கமாட்டீர்கள்.

அப்பா நீங்கள் இல்லாத இந்த நிலையில் உங்களுக்கு செய்யக்கூடிய பெரிய காரியம் ஒன்றுள்ளது. அப்பா உங்கள் குணாதிசயங்களை நாங்கள் வளர்த்துக் கொள்வது தான் உங்களுக்குச் செலுத்தும் அஞ்சலி என்று நான் கருதுகிறேன்.

அப்பா உங்கள் எளிமையான வாழ்க்கை, ஒழுங்கு, எதிலும் நேர்த்தி, மற்றவர்களை, அதிலும் உங்களுக்கு எதிரானவர்களையும் மன்னிக்கும் மனப்பாங்கு, சொல் தவறாமை, அந்த மாறாத அன்பு, எப்போதும் முகத்தில் நிறைந்தபடியிருக்கும் புன்னகை, உபசரிக்கும் பண்பு, உங்கிளிடமில்லாவிட்டாலும் கொடுக்கும் குணம் இன்னும் நினைக்க நினைக்க வரும் உங்கள் அற்புத குணாதிசயங்களை நான் மட்டுமல்ல அப்பா எனது கணவரும் உங்களை அதிகம் நேசித்து உங்கள் பிரிவால் தவிக்கும் மகள் ஏஞ்சலும் கூட கடைப்பிடிப்பாள் இதுதான் அப்பா உங்களுக்கு மகளாக நான் பிறந்ததற்கு செய்யக்கூடிய பிரதி உபகாரம்.

மகள்
பிரமிளா

✝



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To a father and Friend..........

Appa you have run the good race and has gone ahead of us to the glory prepared by God. We know that you are in the presence of God in a place where there is no tears or sorrow yet our hearts are heavy. The vacuum you have left behind is so large that it makes it unbearable. Each day without you is torture.

Appa no wonds will describen now greatful we are for your being such a wonderful father. You had been a perfect father . Life was never a bed of rose for you yet through all the hard times and difficulties you led the way with a big smile. There was never a word of despair or complaint from you. All our needs were met under whatever circumstances. You took pride in each of our steps . When we did well you were the first to approud. In our short comings your best was brought out for you were there, a councelling father and friend with tears and love to show us the way by words and examples. We were priviledged to have you as our father.

You were an adventurer always exploring something and relished in challenges and times of adversity. You were an academic and filled the house with books for us to learn and opened up a whole new world-view for us. You were a naturalist and made us appreciate the creation of God. you were a poet and looked at world and life with the eyes of a poet. With wonder, empathy and love. You were a councellor always a helping hand under whatever circumstances. The work you did with severe triple coronory artery disease is a challenge tc the physically strong for difficult times brought out best in you. No physical limitation was going to restrain you. you could stare at death and yet go about life as if everything was perfectly well.

We know that we will meet you on that shore. But it is difficult to be without you. I feel guilty, sad and angry, guilty and and angry at myself for not being with you at the time you needed me most. Angry at you for leaving us so suddenly unannounced. Yet. I know that had it been your choice you would have spent some more time with us though you joyously anticipated the day your race will end and glory shall begin.

Loving son ,
Dr. Noel Somasundaram,
NHSL.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மகளின் கடிதம்

வண. டீ. ஜீ. சோமசுந்தரம் -

அன்புள்ள, அம்மா, அப்பா,
நன்றிகள் பல
எனை நன்றாகப் படிப்பித்தீர்
சரி பிழை உணரவும்
நன்மையும் தீமையும்
தேர்ந்திடச் செய்தீர்
இருந்தபோதும்
அப்போது நான் உணர்ந்திடவில்லை
நீங்கள் எனக்கு சரி பிழை
உணர்ந்து சரி வழி நடந்து நன்
முடிவெடுத்து
நான் எனை நல்வழி நடத்தும்
ஞானத்தைப் போதிக்கும்
போதனை அதுவென
நான் வளர்ந்து வருவதுகண்டு
தேவையை உணர்ந்து
தனியறை தந்து
முதிர்ந்து வளர்ந்திட
வழியமைத்திட்டீர்
நன்றிகள் அதற்காய்
என் செயல் மூலம் நான்
அனுபவம் பெற்று
என் பிழையுணர்ந்து

எனை நான் திருத்திட
இடமளித்திருந்தீர்
உமக்கவை மிகவும்
துயரளித்தருப்பினும்
என் வழி செல்கையில்
பொறுத்துடனிருந்தீர்
மீண்டுமென் நன்றிகள்
நான் நானாக வளர
உற்சாக மூட்டினீர்
என் மேல் மிகுந்த
நம்பிக்கை வைத்து
முன்னிலுமன்பாய்
ஆதரித்து தவினீர்
வாழ்விலே நான் பெறும்
பெறுமதி மிக்கது.
சந்தோஷம்...
அன்பு...என
எனக்கு நீர் உணர்த்தினீர்
இவ்வின்ப வாழ்வினை
நான் பெற்றுயர்ந்தது
உம்மைப் போன்றதோர்
தாயை.... தந்தையை
நான் பெற்றுள்ளதால்.

இப்படிக்கு
அன்பு மகள்
றஜினி.

(தந்தையர் தினத்துக்காக றஜினி ஆங்கிலத்தில் எழுதிய கவிதையின் மொழிபெயர்ப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To my darling Appa,

I am forwarding this letter to your heavenly address, where you are so happy and truly alive.

There are so many things I need to say to you. Thank you for teaching so many valuable lessons both form the pulpit and from your life. You proved to all of us that God's love His praise His word and people are the only important and lasting things in this world.

You have been the greatest, loving compassionate, understanding and wouderful father to all of us

I thank God that. He has brought me into this world as your daughter. It has been such a privilage to be part of your family.

Appa you were one in a billion. I thank God for blessing me with wonderful 29years with you.

With ammas help you have made all of us what we are, and who we are today .

Most of all I thank God for bringing us into this world as God fearing children.

As paul says in it Timothy 4.7.8 you have fought the good fight, you have finished the race, you have kept the faith ....and you have gone to get the crown of righteousness that is kept for you.

I am so proud of you that you have accomplished what God has asked you to do

There were times I failed you, but you never failed me, you never judged me, you were always ready to forgive with love and compassion.

Couple of months ago when I asked you to pray for me over the phone, you prayed a beautiful prayer full of blessings...as Jacob blessed his children you blessed me with all your heart, soul and body. That moment will never be forgotten and I will treasure that forever till I see you in the land of glory

you were so faithful to God and you spent your life magnifying God. I, in turn will try to be a good steward for the glory of God.

Appa, I can't help missing you. I love you so much. God gave us his best in you. We will not waste his generous gift. And God has left me and our family here... WE WILL CARRY ON until we meet you.

with all my love
your loving little daughter
Rajini



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# About a father whose life will be cherished for many years to come.

A man of faith,

A man of wisdom,

A man of truth,

A man of understanding,

A man of love and kindness,

A man of patience and long suffering.

He was all and more to me. As far as my memory is concerned, I rememeber only a short period of two decades. Every time I failed and fell appah forgave me and gave me the courage to stand again. His dream was to educate and bring us up as good citizens and God fearing children.

Each time I failed and lost , appah and ammah were there like friends with authority to support and guide me with love which many children lack these days.

Appah gave his fullest corporation to me to succeed in sports which ammah never liked as I was engaged in tough sports like rugby.

The amazing patience is the feature of his life. It cannot be simply finished without saying the following fact: "what I am today is due to my appah's long suffering, immeasurable patience and love."

Appah has given to me everything to the best of his ability and made sure that I lack nothing as long as he lived.

Thank you appah! for all what you have done for us and ammah!

"A wonderful father with amazing patience!"

loving son,

Herman Somasundaram



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WHAT DOES A MAN LIKE YOU LEAVE BEHIND ?

**I thought a bit of it before**
**But now I see a bit more of it.**

**Writing a tribute is not with a pen but definitely with a lot of pain.**

**As we watched the video of your ''Home going Service" I was inspired to jot down a few lines to be added in the ''Book of Souvenirs."**

**I saw Mourners.**
**I saw Weepers.**

**I came to know: You have more children in Christ than the children of your mortal life.**

**Elders weep**
**Youngsters scream**
**Children cry**

**Your impartiality in your love - whether it is:**

**old or young,**
**black or white,**
**big or small,**
**poor or rich,**

**is the measure to measure what you did in the Lord's great call!**

**Your ''Home Going Service" is the highlight of your life.**

**You live with Christ forever.**

**Your memories will cherish us always.**

**Son - in - law**
**Richard**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்பின் அங்கிள்!*

உங்களை நான் அங்கிள் என்று அழைத்தாலும், நீங்கள் எனக்கொரு தந்தையாகவே விளங்கினீர்கள். எப்போதும் இன்முகத்துடன் என்னை ஏற்று. ஆலோசனையும் பெலனும் தந்தீர்கள். எங்கள் குடும்பம் செழிக்க வேண்டுமென்பதே உங்கள் குறிக்கோளாயிருந்ததேயல்லாமல், பிழைகண்டு பிடிப்பதாயிருக்கவில்லை.

முன்வைத்த காலை பின்வைக்காமல், எடுத்த காரியத்தை செவ்வனே முடிக்கும் உங்கள் உறுதியும், எச்சூழ்நிலையிலும் எவரையும் நோகாமல் சமாளிக்கும் திறனும், சோர்வுற்றவர்களை தூக்கிவிடும் நற்பண்பும், சத்துருக்களையும் நண்பர்களாய் எண்ணி அவர்களை நம்பி அணைக்கும் பெருங்குணமுமே உங்கள் வாழ்வில் என்னைக் கவர்ந்த அம்சங்கள்.

அங்கிள் நாங்கள் வரும்போதெல்லாம் பெருமகிழ்ச்சியுடன் பெருவிழா கொண்டாடுவீர்கள். சிறுபிள்ளையாய் மாறி விளையாடுவீர்கள். எதைக் கொடுப்போமென்று ஏங்குவீர்கள். உங்கள் உதார குணம் எனக்குச் சவாலாக, பெலனாக விளங்கியது. உங்கள் வாழ்வில் பங்கு கொண்டது என் பாக்கியமே.

அங்கிள் இன்று நீங்கள் இல்லையே என்று ஏங்குதே உள்ளம். ஆனாலும் நீங்கள் பெற்ற பாக்கியத்தை எண்ணி துள்ளுதே நெஞ்சம். அப்பாவின் வீட்டில் சந்திப்போம் நேரில்.

அங்கிள் ஆபேல் மட்டுமல்ல நீங்களும் மரித்தாலும் பேசுகிறீர்கள். எனக்கு மட்டுமல்ல, உங்களைச் சூழ இருந்த சகலருக்கும் இன்னும் நீங்கள் ஒரு சவாலே!

இப்படிக்கு,
உங்கள் அன்பின் மகள் (மருமகள்)
பிறேமா.

---

# To my beloved Father - in - law.........

Uncle, I have seen so many people having many good ideologies in words and thoughts. But you have been simply doing those things without any advertisments in your personal life, family life and in God's ministry you set very high standards in life, we will always look up at your example and try to emulate.

Loving daughter - in - law
Gnani
Dr. Gnani Somasundaram.
NHSL.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியம் ஒன்றின் கடைசி வரிக் கவிதை

அன்று அதிகாலை 3.30 மணி ஆழ்ந்த உறக்கம். குமாரின் குரல் அக்கா....அண்ணன் எனப் பதட்டமாக ஒலிக்க நான் திடுக்குற்று விழித்து பிரமிளாவை எழுப்புகிறேன்....என்ன குமார் என்கிறோம். அக்கா அங்கிளுக்கு சுகமில்லையாம் அன்ரி உங்களை எழுப்பச் சொன்னா..... பதட்டத்துடன் இருவரும் மேல்வீட்டுக்கு ஓடி வருகிறோம். அங்கிள் சாப்பாட்டு மேசையில் கையை ஊன்றியபடி இருக்கிறார். அன்ரி பதட்டத்துடன் அவரின் வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டிருக்கிறா. பிரமிளா "அப்பா...என்னப்பா செய்யிது..." என்கிறாள். "மூச்செடுக்க..ஏலாமக் கிடக்கு மகள்" என்று அங்கிளின் வாத்தைகள் தடுமாறி வருகின்றன. எனக்குச் சிலீரென்றது. அந்தச் சொற்கள் எனக்குள் பயத்தை ஏற்படுத்துகின்றன. அவரோடு பழகிய இந்த 20 வருடத்தில் அவர் இப்படிக் கதைத்ததை நான் கேட்கவில்லை. அன்ரி...இரவு முழுக்க Easy chair இல்தான் இருந்தனர். சரிஞ்சு படுக்கக் கஷ்டமாக இருக்கெண்டவர். தடிமலுக்கு முட்டுமாதிரி இருக்குது என்கிறா "ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவம்" என்று சொல்லி விட்டு பக்கத்து வீட்டுக்கு ஓடுகிறேன். அவர்களைச் சத்தம் போட்டு எழுப்புகிறேன். அவர்கள் நல்ல நித்திரை போல. நான் பொறுமையில்லாமல் திரும்பவும் இங்கு ஓடி வருகிறேன்.பிரமிளா சுடுதண்ணீர் குடிக்கிறீர்களா அப்பா எனக் கேட்க, குடிக்கலாமே.... குடிக்கிறதில பிரச்சினை இல்லை என்கிறார்" அங்கிள். பிரமிளா அவசர அவசரமாக சுடுநீரை ஆற்றி எடுத்துவந்து கொடுக்க அவரே அதை வாங்கிக் குடிக்கிறார்.

மீண்டும் "எனக்கு ஏலாமக் கிடக்கு... நான் டொய்லட் போக..... என்று முடிக்க முன்பே நாங்கள் அவரைப் பிடித்துக் கொள்ள மெதுவாக நடந்து செல்கிறார். அன்டியிடம் பிடித்துக் கொள்ளுங்கள் என்று விட்டு பக்கத்து வீட்டுக் கோணேஸ்வரனை எழுப்ப ஓடுகிறேன். பிரமிளாவும் பிரதீபனுக்கு போன் பண்ணவென கீழே ஓடுகிறாள்.

கீர்த்தனா...... கீர்த்தனா....எனப் பலமாக அழைக்கிறேன். வெளியே நாய்களின் குரைப்புச் சத்தம் பலமாக ஒலிக்கிறது. ஆமிக்காரர்களின் நடமாட்டம் போல என மனதிற்குள் நினைக்கிறேன். கோணேஸ்வரன் எழுந்து வர நிலைமையைப் புரிய வைக்கிறேன். அவரும், மனைவியும் ஓடி வருகிறார்கள். அங்கிள் கட்டிலில் அமர்ந்து இருபுறமும் கைகளை ஊன்றியபடி, மூச்சுவிடச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார். கோணேஸ்வரன் ஐயா....ஆஸ்பத்திரிக்குப் போவம்.....பிரமிளா....அப்பா....ஆஸ்பத்திக்குப் போவம்....... அங்கிளிடமிருந்து சிரமத்துடன் பதில் வெளிப்படுகிறது....... எனக்கு ஏலா மகள்....... நான் ஓடிச் சென்று அவரது அலுவலக மேசையின் சக்கரங்களுள்ள கதிரையை எடுத்து வருகிறேன். அப்பா இந்தக் கதிரையில் மாறி இருங்கப்பா....Please.....பிரமிளா கெஞ்சுகிறாள்....அதற்கு மதிப்புக் கொடுத்து அங்கிள் எழுந்து தொப்பென கதிரையில் அமர்கிறார்.....பிரமிளா கதிரையைத் தள்ளியபடி வர கதவு நிலையைப் பிடிக்கிறார். ஆஸ்பத்திரிக்குப் போவம்...... என்கிறேன் நான்..... "போகும் வரையும்தாக்குப் பிடிக்காதே...."என்கிறார் அங்கிள். நான் விறைத்துப் போகிறேன். என்ன இப்படி ஒரு ஸ்ரேட்மென்ட்.

கதிரையில் வைத்து தள்ளியபடி வருகிறோம். அன்ரி பின்னால் தலையணை இரண்டை எடுத்துக் கொண்டு வருகிறார். பின் மாடிப்படிக்கு வந்துவிட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்க முயற்சி செய்கிறோம். அங்கிள் சடாரென எழுகிறார். நானும் கோணேஸ்வரனும் இருபுறமும தாங்கிக் கொள்ள அங்கிள் மாடிப்படியில் காலடியெடுத்து வைக்கிறார்.அங்கிள் வியர்த்துத் தண்ணியாய் இருந்தார். உடம்பு குளிர்ந்து போய் இருந்தது.. காரின் கதவைப் பிரமிளா திறக்க அங்கிள் மிக விரைவாக காருக்குள் ஏறி அமர்கிறார். அந்த வேகம்..... அந்த நேர்த்தில் அமானுஸ்யமான வேகமாய் இருந்தது.

நான். அன்ரி, பிரமிளா மூவரும் ஏறிக் கொள்ள கார் ஆஸ்பத்திரி போக விரைகிறது. தடைமுகாம்களிலும் சுணக்காமல். அவர்கள் போகும்படி சைகை செய்கிறாகள். 4மணிக்கு ஆஸ்பத்திரியை அடைந்து விடடோம். போர்க்கால அவசரத்துடன் பணியாளர்களும், வைத்தியரும், தாதிகளும்.................... இரவே கொண்டு வந்திருக்கலாமே....." வைத்தியர் தூக்கக் கலக்கத்துடன் சிடுசிடுக்கிறார்........... இப்பதான் இப்படி உரமாக இழுக்கிறது....... என அன்ரி பதிலளிக்கிறா........... இது காடியாக் அஸ்மா" என்று விபரித்து விட்டு அனுமதிக்கான அட்டையை எழுதுகிறார்........ 4ம் வாட்டை நோக்கி பணியாளர்கள் அங்கிளின் Wheel chair ஐத் தள்ளிக் கொண்டு விரைகின்றனர். Ward இலும் துரிதமாக முதலுதவி அளிக்கிறார் அந்த இளம் மருத்துவர், ஒட்சிசன, நெம்பியுலைசர், ஊசி மருந்துகள்........... எனத் தொடர்கிறது. அப்பொழுது எனக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கிறது............ அங்கிளுக்கு ஒண்டும் நடக்காது....... வியர்வை மேலும் அதிகரிக்க...........பிரமிளா ஒரு மட்டையை எடுத்து விசுறுகிறாள்....... அன்ரி துவாயால் துடைக்கிறா........ இடையில் பிரதீபனின் நண்பரான டொக்டர் நிர்மலனுக்கு தகவல் சொல்லுவதற்கு போக நானும், பிரமிளாவும் வெளிக்கிடுகிறோம். அங்கிள் கண்ணை மூடி இருந்தவர் "அம்மா........ என்னை விட்டுட்டு போயிராதீங்க.........." என்கிறார். பிரமிளா அம்மா...... இங்கதான் நிற்கிறா.........அப்பு...நாங்கள்தான் நிமலனுக்கும. கிரிஜாவுக்கும் சொல்லிவிட்டு வாறம்..............என்கிறாள். போதகர் குகநேசன் வந்து அங்கிளுக்காக ஜெபிக்கிறார். அவருடன் வந்த ஏஞ்சல் Pa வைப் பார்த்ததும் அழுகிறாள். குகநேசனும் அங்கிளுடன் கதைத்து விட்டு நம்பிக்கையோடு புறப்படுகிறார். ஏஞ்சலும் தன் Pa விடமிருந்து விடைபெறுகிறாள். அதுதான் அவளுக்கும், Pa வுக்குமிடையில் நடந்த கடைசிச் சந்திப்பு என அப்போது நான் நினைக்கவில்லை.

நேரம் ஆறுமணியாகிறது. வைத்தியசாலை ஊழியர்கள் அன்ரியையும், பிரமிளாவையும் போகும்படி துரத்துகின்றனர். நாங்க வெளியில் நிற்கிறம்....... என்கிறா........ "என்னைவிட்டுப் போயிராதீங்க அம்மா" என்கிறார் அங்கிள்........ மாறி மாறி நெம்பியூலைசர்கள் பிடிக்கப்படுகிறது. அங்கிள் தானாகவே பிடிக்கிறார். ஈ.சீ.ஜீ........ எடுக்கப்படுகிறது. நான் மனதுக்குள் குதூகலிக்கிறேன்.

பாபுவும் ஜெயாவும் வந்து அங்கிளைப் பார்த்துச் செல்கின்றனர். நேரம் எட்டு மணியைக் கடக்கிறது. படுத்திருந்த அங்கிள் எழும்பி கட்டிலில் இருக்கறார். "இப்பொழுது இலேசாக இருக்கிறது" என்கிறார். குடும்ப நண்பர் சிவலிங்கம் வர அவருடன் அங்கிள் நன்றாக உரையாடுகிறார். வாரத்தைகள் தெளிவாக வருகின்றன. எனக்குள் மேலும் நம்பிக்கை பிறக்கிறது.9.00 மணியைத் தாண்டுகிறது. V.P வரப் போகிறார் என்ற பரபரப்பு........ என்னை வெளியில் நிற்கும் படி பணியாளர்கள் அதட்டுகின்றனர். அங்கிளைப் பார்க்கிறேன்.........நன்றாகச் சுவாசிப்பது தெரிகிறது. "என்னை இந்தக் கட்டிலில் தானா வைப்பார்கள்? எனக் கேட்கிறார். நான் V.P வந்து பார்த்ததும் மாற்றுவார்கள் என்கிறேன்."Fan வேணும்" என்கிறார்.......... வீட்ட போய்க் கொண்டு வருவம் என்கிறேன். திரும்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர்கள் என்னை விரட்டுகின்றனர். "இப்ப எனக்குச் சுகம் தானே நீங்கள் வீட்ட போய் குளிச்சி, சாப்பிட்டு வாங்க" என்கிறார் அங்கிள். நான் அரைமனதுடன் போக வெளிக்கிடுகிறேன். "போயிட்டு கெதியா வாங்க" என்கிறார். அங்கிளுக்கும் எனக்குமிடையில் நடந்த இறுதிச் சந்திப்பு அதுதான்...."போயிற்று கெதியா வாங்க " என்பதுதான் கடைசி வார்த்தை..... அந்த வார்த்தையே நம் எல்லோருக்குமான இறுதி வார்த்தையாகவும் அமைந்தது. வெளியில் பிரமிளாவும் அன்ரியும் உள்ளே வரமுடியாமல் நிற்கிறார்கள். நான் விபரம் சொல்லி ஆட்டோவில் விரைகிறேன். வீட்டிற்குள் மாணவன் ரவி வருகிறான். அவனையும் அழைத்துக் கொண்டு விரைகிறேன். I.C.U வாசலில் நண்பர் கோபி, போதகர் யோகராஜா.......அவர் கண்களிலும் கலக்கம் என்ன....... எனக் கேட்கிறேன். அங்கிளுக்கு நாடித்துடிப்பு குறைந்து விட்டதாம். இன்னும் 2 மணித்தியாலம் தான்.......பிரமிளா கொழும்புக்கு போன் பண்ண Dr. கிரிஜாவுடன் போயிருக்கிறா........ என்கிறார். I.C.U.....வுக்குள் நுழைகிறேன்....... அங்கிளைச் சூழ வைத்தியர் குழாம்........ என் நண்பாகள்......பிரதீபனின் நண்பாகள், V.P. அங்கிளைப் பார்க்கிறேன். முகம் இறுகியிருக்கிறது........ அங்கிள்.........அங்கிள்.......என்ற குரல் கேட்டிருக்க வேண்டும்.. கண்களைத் திறந்து பார்க்கிறார்......... பார்த்த கண்கள் மீண்டும் மூடிக் கொள்கின்றன. அதுதான் அவரது இறுதிப் பார்வை. 73 ஆண்டுகள் இந்த உலகையும், அன்புக்குரியவர்களையும் தன் செல்லக் குழந்தைகளையும் அன்பாகப் பார்த்த அந்தக் கண்கள்..........என்னைப் பார்த்தும் சலனமடையாத அந்த விழிகள்.........என்றுமே என் மனத்திரையில் மறையாது. என் நம்பிக்கை தளர்கிறது. வைத்திய நண்பாகளிடம் "கொழும்புக்கு கொண்டு போவமா" என்கிறேன். "முடியாது அந்தக் கட்டத்தை தாண்டி விட்டார்" என்கின்றனர். வெளியே வருகிறேன். பிரமிளாவும் Dr. கிரிஜாவும் வருகின்றனர்......... அவளைப் பார்க்க எனக்குத் துணிவில்லை. ஆனால் என் கண்களில் கண்ணீரைப் பார்த்துப் பதட்டத்துடன்....அப்பா.....போயிட்டாரா? ......... என்கிறாள்......... நான்..........கண்ணீருடன்...இன்னுமில்லை.........என்கிறேன். வெளியே நிற்கும் அன்டியை அழைத்து வர Dr.கிரிஜா செல்கிறார். I.C.Uவுக்குள் போகிறோம்........ அங்கிள் மெல்ல மெல்லப் போய்க் கொண்டிருக்கிறார். பிரமிளா........ அப்பா ..........அப்பா.........' ரஜினி வருவாளப்பா.......... அக்காச்சி வருவாளப்பா............ பொறுமையாய் இருங்கப்பா......... அப்பா போயிராதீங்கப்பா.........என்று அங்கிளின் காதுக்குள் அழைக்கிறார். Pastor. யோகராஜாவும், Pastor. மதுரநாயகமும் வந்து ஜெபிக்கின்றனர். அன்ரி வருகிறா. Darling..........என்று நடுங்கிய குரலில் கூப்பிடுகிறா...... அங்கிளின் நெஞ்சில் தலையை வைத்து "யேசப்பா எனக்குப் பிச்சை தாங்கப்பா........." என்று அழுகிறா.......... அங்கிளின் மூச்சு அந்தக் குரலுடன் மெல்ல அடங்குகிறது.

ஒரு கவிதையைப் போன்றது அவரது இறப்பு........ கிரேக்க துன்பியல் நாடகக் கவிஞர்கள் பாடிய அந்தத் துயரப்பாடல்கள் என் நெஞ்சை நிறைத்திருக்க............ ஒரு காவியத்தின் கடைசி வரிக் கவிதையைப் போல அங்கிளின் உயிர் பிரிந்து போனது............ என் மனைவியின்........... மகளின்........ உணர்வுகளில் இரண்டறக் கலந்திருந்த அங்கிளின் கடைசி மூச்சு காற்றில் கலந்தது. என் சுவாசத்தில் கலந்தது.

மருமகன், பாலசுகுமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *TO MY DEAREST UNCLE, WHOM I NEVER MET*

*I never dreamed that, I would write you a letter, which was going to be the first and the last. I think I have made a big mistake by not meeting you in person while you were here in this world. After I heard the news of your death, I was devastated inside, as I always wanted to see you in person. I can remember a phrase that was in the Daily bread a long time ago:* **"live your life as an exclamation not an explanation".** *You have clearly explained that phrase through your life style.*

*Even though I never met you in person. I heard so much about you from others. A man full of talents, wisdom, joy and beauty. A scholar in Tamil & English Literature. Actually, one of your students said that you could talk about not only ''Kamparamayanam" in Tamil but also Shakespeare's play in English and that proves how much wisdom God must have given you. I learnt from your daughter that you were a Dad with full of love & passion. A man who loved his family with his whole heart and you have done everything that a dad could do to his children. People talked about Jesus after he died as a man not only because he was the Son of God, but also the way he lived his life in this world. Similarly you have lived your life as a blessing to others and through that you have glorified his name.*

*While I was writing this letter, another phrase came to my mind and it says:*

"Some die without having lived;
others live, through they have already died"

*I am sure that your thoughts are always with us and can assure that. I will do my best to ful fill your wishes and will see you, when our dear Lord returns in glory.*

*your loving*
*Youngest son - in - law to be*
*Lakshman*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48/1/1, Bailey Croos Street,
Batticaloa.
10. 02. 1998.

# To my Grandson........

My Dearest Grandson Christo,

We wish you a very Happy Birthday. Although we are unable to be present bodily our hearts are with you on this memorable day. We could not hug you kiss you and wish you - But your Dad and Mom would have done that. I am sure they made a nice cake and you enjoyed it with your friends and all the family. We though not with you in person lifted you in prayer and are interceding with God for him to bestow His fullest Grace, Blessings, wisdom, Protection from evil and all that is nice for the New Year of life you are entering into. I am sure God honoured our prayers. You will be Blessed in everything you put your hand upon both Spiritually and mentaly.

Dear son, Besides all the pomp. beauty and the glory of Germany and all that you see around you daily. I wish you show yourself as a child of God, not only to your follow students at school but also to the people of Germany with whom you have contact with daily. They must see the beauty of Jesus Christ in you. For that you, must be obedient to your parents, and being the eldest in the family teach your younger brother and sister also to love and obey your parents. Have respect for the elders you meet. Honour your Teachers and respect them. Pray for your Dad and Mom daily for what they are doing for you - the sacrifices they make to give you a good education and make you a man Follow the good advise the give you - Accept the corrections they make in your behavior patterns - learn to be a god fearing and parents loving Boy.

You will soon enter into your teen age which is a very testing period for young ones like you. But if you learn to do all I have outlined to you from now onwards and discipline yourself now there is absolutely no chance of your being mislead by the evil one into sin.

Read the Bible regularly and forget not to pray. Teach your brother and sister also to pray. Study hard and god will Bless you with His great Blessing of WISDOM Convey our remembrances to all at home.

Accept our Love and Kissess.
your loving Pa. Ma





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Christopher Richard
Gracht 23,
D-41236 Monchengladbach

# A Letter of a grandson

**To My dearest Grandpa**
**C/O Jesus Christ**
**Golden Path/ Paradise (Heaven)**

**Your letter dated** — **Date**
**10. 02. 1998** — **00. 06. 28**

**TRIBUTE**

**Pa,**

**I have no words to tell you how much I love and, miss you now,**

**Although you are not present bodily any more, you are still a very special Grand-father to me and all your other grandchildren as well.**

**The bodily seperation from a person we love is very very hard and painful but spritualy we are joint and inserparable for ever.**
**I am looking forward to the day we meet in heaven.**

**You are not a forgettable person.**
**You are an exemplary and shining example.**
**You have shown us and the world around you, how to live in fear of GOD.**

**You have taught me a lot of things, PA!**
**No matter big or small. You explained me everything with great patience.**

**I will never forget those things .**

**The letter you wrote me two years ago to my 11th Birthday, which included a lot of advises to me, my age, my daily routine, and my life is very important for me now.**

**PA, now I promise you that I will do all the things which you have written to me in the letter.**

**Thank you for everything you have done to me**

**I LOVE YOU AND I WILL NEVER FORGET YOU !**

**Until the day we meet in heaven**

**Your loving grandson Christo. I LOVE YOU**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TRIBUTE**

*PA ! Du bist nett*
PA, Your are great.
Your are nice
I love You so much
*Ich liebe dich.*

Until the day we meet in heaven

Your Grand daughter Deby
Deine dich liebende Enkelin Deby

GERMAN:

PA, du wolltest mir in Sri - Lanka alles zeigen
Aber jetzt geht es leider nicht .
Trotzdem sind wir alle froh, dass du jetzt bei Jesus bist
PA ! Du bist fur mich kein einfacher Opa.
Du bist ein Sehr besonderer Mensch.
Wir danken Gott fur dein wunderbares Leben
Ich werde dich nie vergessen

PA ! Wann kann ich deine Glatze wieder streicheln???
ICH LIEBE DICH !!!
Bis wir uns im Himmel wiedersehen

Dein dich liebender Enkel Jony.

## English

PA, you wanted to show me everything in and about Sri -Lanka
But now unfortunately it is impossible
Anyway we are happy that you are in Jesus' ~ hands
PA! you are not a simple Grandfather to me
You are a very. special person
We thank GOD for your wonderful life.
I will never forget you
PA! When can I stroke your bald head again.???
I Love you !!!
Until the day we meet in heaven

Your loving grandson Jony



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A TRIBUTE FROM YOUR LOVING GRAND SON DANNY

PA!

***IT IS NOT WORTH CRYING BECAUSE I KNOW THAT YOU HAVE GONE TO LIVE WITH JESUS. PA YOU RAN YOUR RACE SUCESSFULLY AND ENDED YOUR JOURNEY IN VICTORY. PA THOUGH YOU WERE A SERVANT OF GOD ,YOU WERE A SPECIAL ONE FOR ME. I NEVER SAW YOU WITH SAD FACE BUT RATHER YOUR FACE WAS LIT WITH THE JOY OF GOD. YOU HAVE TAUGHT ME LOT OF LESSONS AND STORIES FROM THE BIBLE. PA I CAN REMEMBER WHAT YOU TOLD WHILE TALKING TO ME THAT "YOU WANT TO FOLLOW THE MASTER'S PATH FAITHFULLY AND END YOUR JOURNEY GLORIFIYING JESUS". PA YOU HAVE ACHIEVED WHAT YOU WANTED. AND I PROMISE THAT***



***I WILL FOLLOW YOUR FOOT STEPS. MY PARENTS GAVE ME YOUR NAME – DANIEL . I 'LL LIVE LIKE DANIEL . PA I WILL LOVE YOU TILL THE DAY I MEET YOU FACE TO FACE.***

**FROM THE GRAND DAUGHTER'S**
**PA! WE LOVE YOU AND WE MISS YOU VERY MUCH.**

**WITH LOTS OF LOVE**
**DORA & CHRISTINA**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள Pa...........

நீங்கள் பரலோகத்தில் ஆண்டவரின் காலடியில் சுகத்துடன் ஆண்டவரை ஸ்தோத்தரித்துக்கொண்டு இருக்கின்றீர்கள் என நான் நம்பிக்கையோடு விசுவாசிக்கின்றேன்.

நான் பிறந்ததிலிருந்து இந்தநாள் வரையும் என்னோடு நின்று எடுத்த புகைப்படங்களைப் பார்த்து இப்போதுதான் கண்ணீர் வடிக்கின்றேன். என்னை நல்லொழுக்கத்தில் வழி நடத்தி, என்னை கண்டித்து நல்ல பாதையைக் காட்டினீர்கள் நான் கடைசி நாள் வரையும் நீங்கள் காட்டிய வழியில் நடக்க வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் ஜெபிக்கின்றேன். நான் படிப்பில் அக்கறை காட்ட வேண்டுமென எவ்வளவோ முயற்சி செய்தீர்கள். எனது ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் ஜெபிக்கும் போது நல்ல சுகதேகியாய் வாழ இவளுக்கு உதவி செய்யும். உம்முடைய ஞானத்தை கொடும் என்றெல்லாம் ஜெபித்தீர்கள். நான் வாழ்க்கையில் முன்மாதிரியாக இருக்க வேண்டும்., மற்றவர்களை நேசிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும், பிறர்பொருளை இச்சியாதிருக்க வேண்டும், வேறு ஒரு கடவுளையும் நீ வணங்கவோ, நமஸ்கரிக்கவோ கூடாது, என்றெல்லாம் அறிவுரை கூறினீர்கள். என்னை நல்ல பாதையில் வழிநடத்தியதற்காக நன்றி.

நீங்கள் பூமியில் இருக்கும் பொழுது எல்லா நற்பழக்கங்களையும் உங்களிடம் இருந்து கற்றுக்கொண்டேன் நீங்கள் பூமியில் இருக்கும் பொழுது ஒரு நாளும் உங்கள் முகத்தில் சிடுசிடுப்பையோ, கோபத்தையோ கண்டதில்லை. உங்களிடம் முயற்சி, பொறுமை. இரக்கம், சாந்தம், மகிழ்ச்சி. என்பவற்றை நேரிலே கண்டு கற்றுக்கொண்டேன். நீங்கள் பரலோகத்தில் தூதர்களோடு தேவனைப் பாடிக்கொண்டிருப்பீர்கள் என நம்புகின்றேன்.
இத்துடன் இந்த பரலோகக் கடிதத்தை முடிக்கின்றேன்.

இப்படிக்கு
உங்கள் பேத்தி
Angel

## Grand Pa.. we miss you..

Grand Pa you were lovely.
We would like to sit in your laps and talk to you. Won't we be able to see you? We love you very much. Your youngest grandchild Joanna will not have the priviledge of getting to know you.

We miss you a lot..
Hannah and Joannah.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute to

## D.G Somasundaram, man of many talents

God gives men several talents and he expects them to use these talents to benefit society. (Mathew 25:15-30)
Mr. Daniel Gunaratnam Somasundaram, hailed from a religious and literate family. His father was an evangelist, a scholar and a poet. Gunam, as he was affectionately known in his family circle, inherited these talents from his father.

As a student at Methodist central college in the forties besides excelling in his academic pursuits, he developed his poetic, dramatic aesthetic and sports talents. He excelled at the play fields in athletes, soccer, cricket and gymnastics.

In the mid forties. He became an English assistant teacher at Kurumenveli MMTMS.. Where my father Muhandiram J. S. Elaiyathamby was the head.. It is while teaching at this school he experimented in putting his talents in to the service of the community. He taught English not only to the students but also to the village folk after school hours. He trained the students in gymnastics, dramatics and the aesthetic arts. All of a sudden the village sprung to life with the students and village youth developing their skills and talents.

After undergoing a teacher's training course at Maharagama Teacher's college, he served first as a teacher, and then as a principal in several leading schools. Such as paddiripu MV, Mutur MMV and Sampur MV. At these school his motto was to develop the hidden talents of the pupils be it academic, aesthetic or sports. He sacrificed money and comfort for service.

In recognition of his services, he was made Education Officer in charge for adult education in the Trincomalee district. He was able from this position to organise vocational training to the Trincomalee village youth

Wherever he went, and in whatever he did, he did not forget to preach the Word of God in all his ways, he make himself acceptable to the Lord.

As a very close relative, I have been associated with him from his youth. I am sure that he will be seated at the right hand side of Jesus, whom he served with dedication in body and spirit.

E.J. Satgunarajah,
Consultant, Ministry of Education,
C.A and Sports, Trincomalee,
June 24th, 2000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Tribute to a Gentleman*

**Mr. D. G. Somasundaram, addressed by many as "D.G" or "Gunam" was always addressed by us as "Atthan" as he was the husband of our only sister.**

***I came to know him when I was a teenager, having finished Schooling and aspiring to find a job. He was then Principal of the then Junior School on Knox Road, Mutur. I knew him as a Bridge and Volley Ball Player. I was not aware that he too was a cricketer. Youngsters who were unemployed then organised a cricket club and from time to time arranged Cricket Matches with the Irrigation Department in the Allai Scheme and in every such encounters the Principal was a Team mate and a good spin Bowler.***

***Then it so happened that my sister was appointed to his School as an English Teacher, which resulted in their marriage. He a Methodist choosing a Catholic. as his life partner. The religious hierarchy then did not permit mixed marriages. They were somehow married. I was then their errand boy. I did accompany them, whenever they visited Trincomalee. I cannot forget the days when he had at my disposal his brand new Raleigh push cycle. I have twice cycled to and from Batticaloa, such was his generosity.***

***When I got my first appointment as a Road Overseer, in Anuradhapuras, I was away from all, having to serve in a different environment. When his School came on an excursion to Anuradhapura he, having lodged his click at the Kathiresan school came at dusk with my sister to my place of residence to pay me a visit forgetting his tiredness.***

***When I served in the jungles of Madawachchiya he visited me many times in his fully packed car. I, a man who had never driven a car, drove his Morris Minor at break neck speed to Anuradhapura and Madhu Church. When everyone else was scared, he kept his cool which speaks of the man who was not alarmed of calamities.***

***He nursing a back injury accompanied me to see my life partner and a quick marriage driving us to Mutur for the home coming. My marriage did create problems for me and I had to keep a loof from my Kith & Kin. In his every visit to Batticaloa he never failed to visit us and always encouraged his children to do so.***

***Having lost connection for many years, they at last decided to settle in Batticaloa for Missionary work, coming here as a Reverend.***

***In his last stages, he has brought me closer to them.If otherwise I may not have had the opportunity to write a tribute or even be of any help to them at their tribulation.***

**May he rest in peace.**

***Devanayagam***
***Brother - in - Law***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சங்களிலிருந்து சில வரிகள்..........

தம்பி என்று ஆயிரம் முறை சொன்னாலும் என் ஆசை அடங்காது. குணம் குணம் என அன்பாக அழைத்த அந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். கடைசியாக இலங்கையிலிருந்து புறப்பட்டபொழுது ஏக்கத்துடன்தான் புறப்பட்டேன். என் சுக துக்கங்களில் எல்லாம் ஒன்றாக இருந்த அந்த நாட்கள் அற்புதமானவை என்றும் என்னை என் பிள்ளைகளை பாசத்தோடு கவனித்துக் கொண்டதை எப்படி மறக்க முடியும்.

அன்பான அக்கா
லில்லி
நியூசிலாந்து

என்றும் என் மதிப்புக்குரிய மைத்துனர் அவர்களையிட்டு நான் பெருமைப்பட்டுக்கொள்வதுண்டு. “பிறாசல்” என சொல்கிற பொழுதெல்லாம் களள்ம் கபடமில்லாமல் சிரிக்கும் அந்தச் சிரிப்பு வார்த்தைகளால் விளக்க முடியாதவை

மைத்துனர்
சோமசுந்தரம்
நியூசிலாந்து

---

பெரியப்பா என்று ஒருதரம் சொன்னால் இன்னொரு முறை சொல்ல வேண்டும் என்று நினைப்பேன். பள்ளிப்பருவம் முதல் என் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருந்ததை நான் எப்படி மறப்பேன் முடியும். திருமலை வரும்பொழுதெல்லாம் ஜூட்...... ஜூட் என அழைக்கும் உங்கள் குரல் என இன்னமும் என் காதுகளை நிறைத்த வண்ணம் உள்ளது.

ஜூட்
அன்ரன்ராஜ்
பெறாமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தான் உங்களைக் கண்டு ஐந்து மாதங்கள் கடந்து விட்டன. ஆனாலும் நேற்றுத்தான் நீங்கள் நிலையடியில் நின்று கதைத்தது போல ஞாபகம். அக்காவை கரம் பிடித்த அந்த நாட்களிலிருந்து அன்போடு என்னை நேசித்தீர்கள். வாழ்க்கை முழுவதும் நெஞ்சம் முழுவதும் நீங்கள் நிறைந்திருக்கிறீர்கள்.

மணி
மைத்துனி

மாஸ்டர் எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு நானும் மாஸ்டரும் ஒருநாளும் முரண்பட்டுக் கொண்டதில்லை. யாரையும் நோகடிக்க மாட்டார் மாஸ்டர் பிரச்சினைகள் ஏற்படும் பொழுதெல்லாம் உதவிக்கு பக்கபலமாக இருப்பார். நேரமறிந்து உதவி செய்யும் அவர் உள்ளம்.

சந்தியாப்பிள்ளை
சகலன்

அத்தான் எங்கள் ஒரே தங்கையின் அன்புக் கணவனாய் ஒரு கணவன் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியெல்லாம் வாழ்ந்து காட்டியவர் நீங்கள். எப்போது என்ன உதவி கேட்டாலும் மறுக்கமாட்டீர்களே. என்னில் என் குடும்பத்தில் உங்களுக்கிருந்த அக்கறை வார்த்தைகளுக்குள் கட்டுப்பட முடியாதவைகள்.

மைத்துனர்
வேதநாயகம் பாய்வா

அறிவுக் கொழுந்தாய் ஆற்றல்களின் இருப்பிடமாய் மாற்ற முடியாத மாணிக்கமாய் திகழ்ந்த அத்தானின் மறைவு எங்கள் குடும்பத்திற்கு மாத்திரமல்ல தமிழ் சமூகத்திற்கே ஒரு பெரிய இழப்பு .காலனே உனக்கொரு காலம் வராதா என ஏங்க வைத்த இழப்பு

மைத்துனர்
பிரகாச நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## D.G. as a Dynamic Person....

I have known D.G. Somasunderan for about 65 years since we studied at the same school in Batticaloa. After leaving school I met him again about 25 years ago in Trincomalee. He was a methodist & his wife a Roman Catholic but they both & their entire family found the Lord through our ministry here in Trincomalee. When DG's eyes were opened to the truth he began to study his new found faith with great avidity & he his wife & children had a burning desire to share the good news with otheres. He was a dynamic person with much confidence & ability & became and active member of our church, here in Trincomalee. Later after leaving Trincomalee he started a ministry under the aegis of the Four Square in batticaloa. Despite some ill health he travelled to many remote areas in the Batticloa & Amparai districts & established many new churches.

It is obvious to me that God had chosen him to serve him & given him a wife who would help him energetically, & children all of whom are in the Lord. They are all well set in life. God has also fulfilled His promise in psalm 128 & enabled him to see his children's children So He has indeed been greatly blessed of the Loard. God says Blessed indeed are those who die in the Lord.

Pastor Bertram Casinader
Abundant Life Believers Fellowship
Trincomalee.

## என் இதயத்திலிருந்து.......

அமரர் வண. டீ. ஜீ. .சோமசுந்தரம், அவர்களின் நினைவாக

கடந்த 1994ம் ஆண்டு என் தந்தையின் இழப்பினால் புண்பட்ட இதயத்தில் பல கேள்விகளும், சோதனைகளும் என் வாழ்வில் குறுக்கிட்டு முடங்கியதே. அவ்வேளையில் தேவனது பணி செய்ய, திறமைகளை வெளிக்காட்ட, என் ஜீவியத்தை உயிர் ஊட்ட தேடிவந்தார். சிறியதோர் மோட்டார் சைக்கிளில் தன் அன்பு மனைவியுடன்

அன்னார் மூலமாய் தேவனது அழைப்பை உறுதியாய் பெற்றுக்கொண்டேன். மலர்ந்திருந்த அன்னாரது வாழ்க்கையிலே ஆவிக்குரிய நறுமனம் வீசியது. அவரில் காணப்பட்ட மிக முக்கிய பண்புகள் அன்பு, விசுவாசமாய் கொண்டு ஓடிய ஓட்டம். இவைகளைக் கண்டு வியந்த சந்தர்ப்பம் அநேககம். இவ் அமரரை இழந்தது ஓர் பேரிழப்பு என் ஊழியத்தில் இதை ஈடு செய்ய இயேசு துணை செய்வார்.

நன்றி

ஊழியக்காரி
பா.கலாவதி
இ.நா.சு.சபை, பாண்டிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Message of Appreciation - D.G. Somasundram*

*On behalf of the living Way Church Council I am privileiged to express our sincere appreciation for pastor D.G. Somasundram who was called to be with the Lord on the 08th , of June2000.*

*I came to know pastor Somasundaram personally in 1992, at which time he was serving as an administrator of the Living Way Church. pastor Somasundaram has always been a father figure to the congregation with his wisdom and counsel. His commitment to his calling has been exemplery.*

*We thank God for the gift pastor Somasundaram has been to the Church, and extend our love and support to Mrs. Somasundaram and the family who continue to serve the Lord faithfully, and thank them for the blessing they are to the Church.*

*malcolm de Costa*

## *A FATHER AND A COUNSELOR*

Rev. Daniel Somasundaram, known to many as "uncle Somasundaram" was indeed a blessing and a model for hundreds of sons and daughters. You ask me what his goal in life was and I will tell you that it was "building up others to respond to life's challenges the way he did"

He took great joy to exhort the broken hearted and always looked forward to guide the miss directed young people al ways found comfort and strength under his canopy of love and caring . Being the oldest in the church that he served he set the example for the young to follow and when it was time to go home, he had by then accomplished his hearts desires

I take great pride to have known him as a father and as a leader who was never to busy to hug me and tell how much he loved me and my wife. Thank you lord for the gift you have us I will always be thankful for uncle Somasundaram .

Rev. Keith Ferreira
(Board Member)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கிளுக்கு ஒரு கடிதம்.........

அன்பின் **Uncle,**

நாற்சதுர சுவிஷேச சபையின் மூலமாக நாம் ஒருவரை ஒருவர் அறிந்து புரிந்து நமக்குள் ஒரு உறவைக் கட்டி எழுப்பி கடந்த 16 வருடங்கள் அந்தப் பாதையில் நடந்து செல்லுகின்ற வேளையில் தேவனுடைய அழைப்பை ஏற்று தேவனோடு சஞ்சரிக்க தேவசமுகம் சென்ற உங்களுடைய பிரிவு மன வேதனையைத் தந்தாலும் நாம் மறுபடியும் சந்திப்போம் என்ற ஆறுதலில் நீங்கள் எங்கள் முன் விட்டுச் சென்ற முன்மாதிரியான ஜீவியத்தை கடைப்பிடித்து வாழ்வது இக்காலகட்டத்தில் பெரிதும் உகந்தது என்று உணர்கிறேன்.

குறிப்பாக என்னுடைய குடும்ப வாழ்க்கைக்கு நீங்கள் தந்த ஆலோசனைகள் மிகவும் பயனுள்ளதாயிருந்தது. நான் உங்களுடன் பழகிய, பேசிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், உங்கள் ஆலோசனை, புத்திக்கூர்மை, என்னைப் பல வழிகளிலும் சிந்திக்க தூண்டியிருக்கிறது. விஷேசமாக வாலிபர் முகாம் தேசிய மகாநாடு, போன்றவற்றில் நாங்கள் ஒரே அறையில், ஒன்றாக இருந்த காலங்களை நினைத்த் பார்க்கும் போது இன்னும் என் மனக் கண் முன் தெரிவது உங்களின் கனிவான, கம்பீரமான தொனியும், "யேசுராஜா வாரும் நாங்கள் அப்பம் சாப்பிடுவோம்" என்ற அன்பான உபசரிப்புமே.

"இனிமேல் எனக்குத் தெரியாது. நான் லெஸ்லியிடம் சொல்லப்போகிறேன்" என்று நீங்கள் கூறிய வார்த்தையை நான் அடிக்கடி கூறி பகிடி பண்ணுகிற போதெல்லாம் நீங்களும் கோபிக்காமல் என்னுடன் சேர்ந்து சிரித்த நாட்களை எண்ணும்போது உங்களின் உயர்ந்த குணம் என்னையும், என் குடும்பத்தையும் உங்களுடன் இன்னும் நெருங்கி அன்பு செலுத்த தூண்டியிருக்கின்றது. உண்மையாகவே நீங்கள் எங்கள் யாவருக்கும் கிடைத்த ஒரு சொத்து, எங்கள் சபைக்கு கிடைத்த முத்து. சபையிலிருந்து ஓய்வு எடுத்தாலும், சளைக்காது வயதான கோலத்தில் துணிச்சலோடு முன்நோக்கி சென்று நீங்கள் செய்த ஊழியம் எங்களுக்கு ஒரு உற்சாகத்தையும். உந்துதலை கொடுப்பதாயிருந்தது.

இந்த நினைவு நாளிலே உங்களைப் போல வெற்றியுற்ற கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்துவோம் என்ற உறுதியோடு இக் கடிதத்தை முடிக்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு,<br>யேசுராஜா<br>குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிச்சுவடுகளைப் பின்பற்றி.......

1982ம் ஆண்டு நான் ஊழியத்திற்கென்று காலடி எடுத்து வைத்த ஆரம்ப நாட்கள் அங்கிள். அன்ரி சோமசுந்தரம் குடும்பத்துடன் பழகும் வாய்ப்பு கிட்டியது. அன்று முதல் தேவ தாசன் நித்தியத்திற்குள் பிரவேசிக்கும் நாள் வரை அவருடன் பழகிய நாட்கள் மறக்க முடியாதவையாகும் அவரது இழப்பு அவரது அருமை துணைவியார் பிள்ளைகள் ஏன் குடும்பங்கள் உறவினர்கள், நண்பர்கள், யாவருக்கும் பேரிழப்பு என்று கூறலாம்.

எதையும் தைரியத்துடன் முகம் கொடுத்து தேவனுக்கென்று செயல் படுவதற்கு எப்பொழுதும் அவர் முன்னின்று நம்மை உற்சாகப்படுத்துவது நம்மால் மறைக்க முடியாத உண்மை கிறிஸ்த்துவின் பணிக்கென்று தன்னை முழுமையாக அர்ப்பணித்து அயராமல் ஊழியம் செய்து இன்று அடியான் மறுமைக்குள் பிரவேசித்தாலும். அவர் செய்த ஊழியமும், அவரது வாழ்க்கையும் நம்மெல்லாருக்கும் முன்மாதிரியாக வைக்கப்ப பட்டிருக்கின்றது. கிறிஸ்த்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடந்த அவருடைய ஜீவியம் நம்மெல்லாரும் தொடர்ந்தும். கிறிஸ்த்துவின் பணியில் முன்னேக்கி ஓட! வழிகாட்டியாக தேவன் கிருபை செய்வாராக அவரது பிரிவால் துயரமடைந்தாலும் அவருடைய மனைவி, பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள் யாவரது கண்ணீரையும், உள்ளத்தின் வேதனைகளையும் ஆறுதலின் தேவன் தாமே துடைத்து சமாதானத்தை கொடுப்பாராக.

கிறிஸ்துவினுள் அன்பின்
Pas. K. லாசரஸ்

---

## தேவபணியில்....

08.06.2000 ஆம் திகதி இறைவனடி எய்திய எனது மதிப்புக்குரிய வண. D.G. சோமசுந்தரம் அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பெரியது போற்றத் தக்கது பாராட்டப்பட வேண்டியவைகளாக உள்ளன. சமூகத்தற்கும், ஏழைகளுக்கும், இறைவனுக்கும் ஆற்றிய அளப் பெரிய பணிகள் பசுமரத்தாணிபோல பசுமை நினைவுகளாக மக்கள் உள்ளங்களிலும் எனது உள்ளத்திலும் நீங்காத இடத்தைப் பிடித்தவர்.

. தன்னை மாத்திரம் தேவ பணிக்காக அர்பணிக்காமல் அவர் குடும்பத்தாரையும் என்னைப் போன்ற பல போதகர்களை உருவாக்கி இறை பணி செய்ய அரும் பாடுபட்ட மேதை என கூறினால் மிகையாகாது சமூகத்திற்கு எதிரானவர்களையும் சமூக வாழ்க்கையில் மனக்கிலேசம் அடைந்தவர்களையும், நோயினால் அவதியுற்றவரை அன்பினாலும் தேவ வார்த்தையாலும் சமூகத்தில் மதிக்கத் தக்க வர்களாகவும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுத்த உத்தம புருசாராவர் அவர் இறைவனின் சன்னிதானத்தில், மகிழ்ச்சியோடு இருக்கிறார். நாமும் முகமுகமாய் சந்திப்போம்.

வண. எப். யேசுராசா
பாண்டிருப்பு - கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ என் தாசன்
# நான் உன்னை தெரிந்து கொண்டேன

அமரர் வண.டீஜீ .சோமசுந்தரம் தேவனாகிய கர்த்தர் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவிற்குள் உங்களைத் தெரிந்து கொண்டார்.(எபே 4:1)

தாயின் கர்ப்பத்தில் தேவன் உன்னைத் தெரிந்து கொண்டார். (சங் 139:13)

தாயின் கர்ப்பத்திலிருந்து முதல் கர்த்தர் உம்மை அழைத்து, தாயின் வயிற்றிலிருக்கையிலே கர்த்தர் உம் நாமத்தை பிரஸ்தாபிப்படுத்தினார். (ஏசாயா 49:1)

அது மட்டுமல்ல நீர் பிறந்த நாளும் ஆசிர்வதிக்கப்பட்டதானது உம் தாயக்கு நீர் மிகவும் அருமையான ஒரே மகனுமாவார். ( நீதி 4:3)

உம்மைப் பெற்ற உம் தாயும், தகப்பனும் சந்தோஷப்பட்டார்கள் (நீதி 23:25)

அது "உமது வளர்ச்சி அபூர்வமாயிருந்தது" அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் என்று 1 இரா 3:91 இல் சாலொமோன் கேட்டுப் பெற்றுக் கொண்டது போலவே நீரும் தேவஞானம் லௌலீக ஞானம் இயற்கையின் ஞானம் கேட்டு பெற்று வளர்ந்தீர்.

ஆதாமுக்கு ஏவாளை ஏற்ற மனைவியாகத் தேவன் கொடுத்தத போல் மனைவியைக் கண்டடைகிறவன் நன்டைமயைக் கண்டடைகிறான் இருள் (நீதி 18:22)

குணசாலியான ஸ்திரி தன் புருஷனுக்கு கிரீடம் (நீதி 12:4)

கிரீடமான மங்கள திருமணத்தையும் பெற்றீர். நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசிர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசிர்வாதமாய் இருப்பாய்.(ஆதி 12:2)

ஆபிரகாமை ஆசிர்வதித்த வண்ணமாய் உம்மையும் தேவன் ஆசிர்வதித்தார்.

நீ என் தாசன் நான் உன்னைத் தெரிந்து கொண்டேன் (ஏசாயா 4.19) என்று அழைப்பைப் பெற்று கர்த்தர் உம்மை அபிஷேகித்து இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு காயம் கட்டுதலையும் சிறுமைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்து தலைக்கூறவும் துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும் (எசாயா 61:1:2)

அனேக அடைக்கலான் குருவிகள் வந்து தங்கி இளைப்பாறி செல்லத்தக்கதாகவும் தேவன் உம்மையும் பயன்படுத்தினார். அதற்கு ஆதாரமான ஜீவகற்களும். ஜீவ விருட்சங்களும் இன்றும் இருக்கிறதல்லோ.... மரணத்தைக் காணாமல் உயிரோடு இருப்பவன் யார் சங் 89:48 எங்கள் ஆயுத நாட்கள் எழுபது வருஷம். பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாய் இருந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே (சங் 90:10) இந்த வசனத்திலுள்ள சஞ்சலம் வருவதற்கு முன்னமே நீர் கிறிஸ்துவிற்குள் நித்திரை அடைந்தீர். நீ இன்று என்னுடன் கூட இயேசுவோடு பரதீசிலிருப்பாய் (லூக்கா 23:43)

ஆனாலும் ஒரு இரகசியம் எக்காள தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். (கொரி 154:52)

தேவன் உம்மை உயிருடன் மீண்டும் எழுப்புவார். ஓட்டத்தை முடித்த உமக்கு அழிவில்லாத கிரீடம் உண்டு. நித்திய காலமாய் பரலோகத்தில் நிலைத்திருப்பீர். நாமும் முகமுகமாய் சந்திப்போம் என்கிற எதிர்பார்ப்போடு இருக்கின்றோம். ஆகையால் இந் வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.(1.தெச 4:18)

வேதம் கூறும் பிகாரம் இந்த வார்த்தைகளினாலே உங்கள் மனைவி, பிள்ளைகளுடன், நாங்களும் தேற்றப்படுகின்றோம்.

"இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்"

வண. S. குகநேசன்

நாற்சதுசுவிசேஷ சபை, மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையே!

பாவம் நிறைந்த இப்புவியிலே
பலரது பாவங்களையும் அழித்திட
பாலகனாய் பிறந்தீரே நீர்
பலம் மிக்க பவித்திரனே!

நித்தமும் இயேசுவின் பிள்ளையாய்
நினைவுடன் மெய்மறக்க வாழ்ந்தீரே
நின் உடலை வருத்தி எம்மை
நிறைவான மனதுடன் வாழச் செய்தீரே

எல்லா குழந்தைகளையும் நினைவுடன்
எம் குழந்தையாய் நினைக்க செய்தீரே!
எப்படி ஐயா குழந்தைகளைவிட்டு
எம் புனிதமனதை விட்டகன்றீர்

எத்தனை முறை நாம் பிறந்தாலும்
எத்தனை குழந்தைகள் பிறந்தாலும்
எல்லா குழந்தைகளும் நிந்தன்
குழந்தையாகவே பிறக்கும் ஐயா!

உலகின் மனம் வென்றவரே
உம்மால் மனம் மாறியோரெல்லாம்
உம்மையே நித்தமும் பூசிக்கின்றோம்
உம் அருள்வாக்குகளையே பேசுகின்றோம்

எம் ஒளிதந்த ஒளிசுடரே
அப்போதும் நீர் ஒளிதானையா!
எங்கெல்லாம் நீர் சென்றீரோ
அவ்விடமெல்லாம் பிரகாசமையா!

விஜயரத்தினம் மதன்
பீட்ரு. எஸ்டேட்
நுவரெலியா.

## என் பெரியவரைக் கண்டேன் இப் பெரியாரில்

பரம பிதாவைக் கண்டேன்
தேவ குமாரனில்
தேவ அன்பைக் கண்டேன்
எந்தன் நேசரில்
சத்திய வசனம் அறிந்தேன்
வேதாகமத்தில்
என் பெரியவரைக் கண்டேன்
இப் பெரியாரில்

அற்புதங்கள் பல பெற்றேன்
அற்புதர் கரத்தினில்
அதிசயங்கள் பல கண்டேன்
அதிசயமானவரில்
ஆலோசனைகள் பல பெற்றேன்
ஆத்மீக வசனத்தில்
என் பெரியவரைக் கண்டேன்
இப் பெரியாரில்

எக்காள சத்தம் கேட்பேன்
அவர் வருகையில்
மணவாளன் அழகு காண்பேன்
மேகமீதினில்
வெற்றி வேந்தனைக் காண்பேன்
இரண்டாம் வருகையில்
இப்பெரியாரையும் காண்பேன்
பரிசுத்தவான்களில்

பாஸ்ரர். சோமசுந்தரம் ஐயா பற்றி
சகோதரன் குகன் ராஜதுரை பாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

இறைபணியில் எம்மோடு சேர்ந்துழைத்து இறைவனடி இளைப்பாறும் இறைபணியாளர் வண. டி. ஜீ. சோமசுந்தரம் அவர்களை எண்ணும்போது உள்ளம் பேருவகை கொள்கிறது தள்ளாத வயதிலும் இயேசுவின் பணியில் தகப்பனார் கொண்டிருந்த தணியாத தாகத்தை வெறும் வார்த்தைகளால் வடிக்கமுடியாது. மத்தேயு 6:33 "முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்" என்று தேவ வார்த்தை கூறுகிறது. இவ்வார்த்தைகளை வாழ்வாக்கி வளம் பெற நாம் தவறுகிறோம் ஆனால் தகப்பனார் தன் மகனை தேவ ஊழியனாக்கியதோடு நின்றுவிடாது. தானும் தேவ ஊழியனாகி இவ்வார்த்தையினால் வளம் பெற்று வாழ்ந்தும் காட்டியிருக்கிறார்.

பதினாறு வருடங்களுக்கு முன் இவ்வருமையானவரைப் பற்றி அவரது மகன் பாஸ்டர் நிரஞ்சன் பகிர்ந்து கொண்ட ஒரு காரியம் இன்னும் என்னுள்ளத்தில் பசுமரத்தாணிபோல பதிந்துகிடக்கிறது. சகோ. நிரஞ்சன் ஆண்டவரின் ஊழிய அழைப்பெற்றவுடன் அதைப் பலருடனும் பகிர்ந்து கொண்டாராம். ஆனால் குடும்பப்பொறுப்புப் பற்றிக் கூறி பலரும் தேவ ஊழியனாக இவர் வருவதை ஊக்கிவிக்குவில்லையாம். ஆனால் தகப்பனார் மட்டும் "மகனே! தேவன் ஊழியத்துக்கு அழைத்தால் மற்றவையை பற்றியெல்லாம் யோசிக்காதே அவற்றையெல்லாம் பார்த்துக்கொள்ள கர்த்தர் போதுமானவராக இருக்கிறார். "என்று கூறி மிகவும் உற்சாகப்படுத்தினார்.

அவர் உற்சாகப்படுத்தியதனால் ஒரு நல்ல தேவ ஊழியரை இன்று நாம் காண்கிறோம் மட்டுமல்ல நல்ல விசுவாசிகளாக, ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளைகளை ஆண்டவன் அவருக்கு கொடுத்திருக்கிறதையும் நாம் காண்கிறோம். தேவ வார்த்தை பொய்ப்பதில்லை என்பது இவர் வாழ்வில் நிருபணமாயிற்று.

உழைத்து இளைப்பாற வேண்டிய வயதில் இளைப்பாற இது காலமல்ல இறைபணியை இறுதி மூச்சுவரை செய்யவேண்டும் என்று கூறியதோடு நின்று விடாது செய்தும் காட்டி இளம் ஊழியர்களுக்கெல்லாம் முன்னுதாரணமானார். நாற்சதுர சுவிஷேச சபையின் கிழக்குப் பிராந்திய பொறுப்பாளராக அவர் ஆற்றிய பணி மகத்தானது. மட்டக்களப்பில் சுவிஷேச கூட்டங்கள் ஒழுங்குபண்ணப் பட்டபோதெல்லாம். அவர் வழங்கிய ஒத்துழைப்புக்கள் மறக்கக் கூடியவை அல்ல.

நல்ல போராட்டத்தை போராடியவர் இன்று நீதியின் கீரிடத்தைப் பெற்று மகிழ்ச்சியின் எல்லையிலிருப்பார் என்று விசுவாசிக்கிறேன். தகப்பனாரின் வாழ்வு தேவஊழியர்கள் உருவாகுவதற்கு உந்து சக்தியாக திகழும் வாழ்க இயேசுவின் பணி.

Pastor. Sam .Amuthan
பாஸ்ரர் சாம் அமுதன்
House fo Prayer ministries
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இதயத்திலிருந்து......

அங்கிள் சோமசுந்தரம் அவர்கள் எப்படிப்பட்ட சூழ் நிலையிலும் யாவரையும் அன்புடன் சமாளிக்கும் திறமை கொண்டவர் அவரது புன்னகை உடைந்த உள்ளத்தையும் தேற்றும் தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்களுடன் ஆங்கில இலக்கிய இலக்கணத்தையும் கற்றறிந்த மேதை. வேத அறிவும், வியாக்கியானமும் தேவன் அவருக்கு அருளிய அருங்கொடை.

பின் தூங்கி முன்னெழுதல் பெண்களுக்கே உரியது என்பர். இது அங்கிள் சோமசுந்தரத்திற்கு மிகவும் பொருந்தும். காரணம் எல்லாரும் தூங்கிய பின்னர் ஆறுதலாய் அமர்ந்திருந்து வேதத்தை ஆராய்வார். எல்லோரும் எழும்புமுன் எழும்பி வேதத்தை வாஞ்சையுடன் தியானிப்பார். ஒரு நாள் கூட காலை 6.00 மணிவரையும் தூங்கியதை நான் கண்டதில்லை "நீங்களெல்லாம் நித்திரைக் கண்ணனுகளடா" அன்புடன் எம்மைப்பார்த்து கூறுவார். இப்படிப்பட்ட ஒரு மனிதனை இந்த உலகில் நாங்கள் இழந்தது என்றும் ஈடு செய்ய முடியாத ஒரு பாரிய இழப்பு. இப்படி ஒரு தேவமனிதனை இந்த உலகில் எப்போ நாம் காண்போமோ?

போதகர். எஸ் வெற்றிவேல்
அன்புவழிபுரம்,
திருகோணமலை

---

## நல்ல பாத்திரம்

அமரர் வண. D.G. சோமசுந்தரம் இயேசுவின் ஒரு பாத்திரம். அவர் வாழ்ந்த போது அவர் வேதத்தில் விசுவாசித்து நடந்த பல வாக்குத்தங்களில் ஒன்று என்னவெனில் "என் ஜீவனுள்ள நாளெல்லாம். நன்மையும், கிருபையும் என்னை தொடரும் நான் கர்த்தரின் வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" என்பதாகும் இவர் கர்த்தரின் பாத்திரம் சில காணிக்கை வரிகள் சகோதரனுக்கு

பல பல பாத்திரம் இருந்திடினும் - வீட்டில்
நல மருளும் சில பாத்திரம்
அதிலொரு பாத்திரம் ஆகிடவே
அடியான் (சோமசுந்தரம்) எனையும் தெரிந்துவிட்டீரே
அறிவினில் உமது பாத்திரமாய்
ஆவியில் உமது பாத்திரமாய்
அடியவன் (சோமசுந்தரம்) என்னையும் தெரிந்திட்டீரே
ஆமேன்

தனது சபைகளை ஊக்கப்படுத்துவதும், ஏனைய பெந்தகோஸ்தே சபைகளை ஐக்கியப்படுத்தலும் இந்த பாத்திரத்தின் சிறப்பு. ஐக்கியம் இல்லையேல் பரத்தில் இடமில்லை. இதற்கு சான்று இந்த அருமையான பாத்திரம். இதனை வாசிக்கும் இவரது குடும்ப அங்கத்தவர்களே சகோதரனே! சகோதரியே ! நீயும் இந்த பாத்திரத்தை போல வாழ கர்த்தர் அழைக்கிறார். நீவருவாயா....

அருட்திரு. ஞா. சாந்தகுமார்.,
கல்வாரி கிறிஸ்துவின் திருச்சபை, ஒந்தாச்சிமடம்
களுவாஞ்சிக்குடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நொந்த இதயமுடன்.....

அன்றொரு நாள் ஆவணித் திங்கள் இந்த
அகிலத்தில் அவதரித்தாய்
பாங்குடனே மாணவப் பருவமதில்
தேமதூர தமிழினையும் சர்வ
தேச தொழியினையும்
திருத்தமாக கற்றிருந்தாய்

அறியாமை இருளகற்றும் ஆசானாய்
மாணவப் குலத்தின் மடைமை நீக்கி
கல்வி தனை ஊட்டி நின்றாய்
பதவி விட்டு ஓய்ந்த வேளை
பரமன் சேவை செய்யவெண்ணி
நாற்சதுர சபை தனிலே
நீயிணைந்தாய் ஊழியனாய்
பருவத்து வாசலில் நின்ற ஊழியர்க்கு
குருவாக இருந்து நெறிப்படுத்தி
தேவராஜ்ஜியத்தை இந்த குட்டித்
தீவில் கட்டி நின்றாய்
வெற்றியின் வழி தன்னை கவிதை
நூல் வழியாய் காட்டி நின்றாய்.

பலருக்கு தந்தையான நீர்
இந்த புவிவிட்டு
போனதெண்ணி நாம்
நொந்து போன இதயத்தோடு
தேவனுடன் நீர் வாரும்
அந்த தேனான நாளுக்காய்
மீளாத் துயருடனே காத்திருப்போம்.

வண. எஸ். ஜெயச்சந்திரன் (திருமலை)

## நெஞ்சில் நிறைந்த நினைவலைகள்

என்றும் என் நெஞ்சை விட்டு அகலா
என் நெஞ்சுக்குள் நிறைந்ததலைவனே
கிழக்கில் உதித்த உதய சூரியனே
கிறிஸ்துவுக்குள் மலர்ந்த வெற்றி வீரனே
மட்டு நகர் வரலாற்றில் பிறந்து
மண்ணின் பெருமையை
விளக்கிய பெருந்தகை

நல்ல ஓட்டத்தை ஓட நினைத்தேன்
அப்பொழுது எனக்கு
கர்த்தரால் கிடைத்தவர்
தந்தை வண.டீ.ஜீ.சோமசுந்தரம் அவர்கள்
பிறந்த பலனை அடைந்த
பெருமைக்குரியவர்
தான் கொண்ட இலட்சியத்தை இறுதிவரை
என்றும் வெல்லும் தகுதி கொண்டவர்
கர்த்தருக்குள்ள விசுவாசத்திலும்
நம்பிக்கையிலும்
என்றும் தழைத்து ஓங்கியே விளங்கியவர்
எதனையும் தனது
வல்லமையால் செய்யாது
இயேசுக்கிறிஸ்துவின் அன்பினாலும்
கிருபையினாலும்
வெற்றி கொண்ட வெற்றி வீரன்
வண.டீ.ஜீ.சோமசந்தரம் அவர்கள்
மறைந்தும் மறையாத மா மனிதரவர்

வண.A.I. ஜேசுநேசன்
நாற்சதுர சுவிசேஷ சபை
கோட்டைக் கல்லாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A TRIBUTE

The mixed feelings of condolence and devotion inspired from the bottom of my heart, urged me to pen a few lines about late Uncle D.G. Somasundaram - as I used to call him always - pastor of Four Square Church, Batticaloa, who departed from us to the kingdom of God, on the 8th day of June 2000.

He was well aquainted with me since the year 1979 as if I were one of his family member, undergoing a training at Bible College, Colombo. The first countenance of the late pastor really enlightened my soul, enabling me to esteem him with high regard. He was an embodiment of love, God fearing, and spiritual. He set an example to many a young man to reform and commence a spiritual life.

He was much attached to his virtuous, devoted, dutiful wife. He was blessed with six children and all of them are leading a spiritual life Besides, his nine grand children, too are brought up in the same manner, bestowed on to him by God, a rare gift.

He had a great virtue of forgivness strictly adhering To the motto "To err is human and to forgive is Divine." His exemplary character of tolerance, patience enabled him to solve many problems peacefully. He was ammicable and magnanimous towards his fellowship members. He was a good writer, equipped with spiritual knowledge. The fruit of the spirit embedded in him.

I console the family members with the following words of God:

The -uncompromisingly- righteous shall flourish the palm tree be long lived, stately, upright useful and fruitful -: he shall grow like a cedar in Lebanon -majestic, stable, durable and incorruptible. Planted in the house of the Lord, they shall flourish in the courts of our God. Growing in grace they shall still bring forth fruit in old age: they shall be full of sap of spiritual vitality and rich in the venduer of trust, love and contentment. They are living memorials to show that the Lord is upright and faithful to His promises. He is my rock, and there is no unrighteous in him. (Amp. Psalm 92: 12- 15).

My prayers to God will certainly answer the sorrows of his bellowed wife, children, grand children to calm down and restore them strength and power to bear up the temporary absence until meeting him again in the Lords Kingdom.

Ps. N. Somanathan,
Christian Revival Crusade
Colombo
28th, June 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரக்கத்தின் சிகரமே

காருண்ணிய கடலே - என்றும்
மறையாத நல் முத்தே
அலை கடல் வற்றும் - ஆனால்
உம்முடைய சேவை வற்றாது

வாடிப்போன பயிருக்கு - ஏங்கி
தவிக்கும் உள்ளத்துக்கு
நல் ஆறுதலே

இரக்கத்தினால் ஆற்றிய
சேவைகள் அனேகம் - இந்த
இரக்கத்தின் சிகரம் - போல்
வேறு யார் நிற்பது

இன்று அனேக ஓட்டங்கள் உண்டு
நாங்களும் ஓடுகிறோம் - ஆனால்
நீ ஓடியது - என்றும்
இரக்கத்தின் ஓட்டமே

போதகர்
ம.ஜோர்ஜ்

## காண்பேனா கருணையின் சமாரியனை

அன்பின் சின்னம்
அமைதியின் மன்னன்
ஆற்றும் துணைவன் - என்னை
அணைக்கும் வள்ளல்

வழிக்கு விளக்கு
வாழ்வுக்கு வெளிச்சம் - என்
இருளுக்கு வெளிச்ம் - என்
இக்கட்டுக்கு ஒளி விளக்கு

காயங்கள் ஆற்றும்
கருனை நாயகன்
உடைந்த உள்ளத்தை
பொருந்தும் தகப்பன்

உம்மைப் போல - ஒரு
நல்ல சமாரியனை
எங்கே காண்பேன் - இனி
எப்போ காண்பேன்

உமது பிரிவு
எனக்கு இருள்
என்றோ ஒருநாள் - அன்பர்
இயேசுவின் மடியில் காண்பேன்

போதகர்
S.தவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *நித்திய வீட்டுக்கு ஒரு நிருபம்*

பாசமிகு பண்பான தேவபணியாளனே
மண்ணுகில் பிரியாவிடை தந்து
விண்ணுலகில் புதுவாழ்வு வாழ
கண் இமையில் கடந்து சென்றதால்
பாரில் உன்புகழ் பலர்பாடி நிற்கின்றனர்
ஒரம் நின்று ஒட்டுக்கேட்டேன்
ஆமாம் நீங்கள்
பண்புக்கும் பாசத்துக்கும்
அன்புக்கும் ஆதரவுக்கும்
நன்றிக்கும் நன்மைக்கும்
நல்லவனாய் வாழ்ந்தீர்களாம்.
அறிவிலும் ஆற்றலிலும்
ஆங்கில தேர்ச்சியிலும்
அனேகரை எழுப்பி
அரிய பல சேவையாம்
படிப்பில் மட்டும் வித்தகன் இல்லையாம்
பல கலையிலும் விண்ணனாம்
ஓவிய சிற்பியாம், ஒடாவியாம்
ஆங்கில கவிஞனாம்,
மொழிபெயர்ப்பாளனாம்
இன்னும் சில
இறைபணியில் இளைக்காமல்
ஏயேசுவின் நண்பனாய்
ஊழியக்காரரை ஊக்குவித்தனராம்
ஆத்தும் பாரத்தால் அலைந்து அலைந்து
ஐம்பது சபைகளைக் கட்டிய வீரனாம்
குடும்ப பொறுப்பாள்னாம்
நல் மனைவிக்கு
உற்ற நண்பனாம்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
மருமக்கள் என்றவுடன்
மகிழ்வில் திகழ்பவராம்
சிறியவர், பெரியவர் என்று
சீராக வேத அறிவு புகுத்தினீராம்
நகைச்சுவையாளனாம்
யான் எதைச் சொல்வேன்.
உங்கள் அன்பும் பாசமும்
வழிநடத்துதலும் அறிவும்
என் வாழ்வில் வேண்டும் என்று என்
இறைவனை வேண்டுகிறேன்

A. பேரின்பராஜா
பெரியகல்லாறு

## ஓய்ந்து விட்ட பணி அலைகள்

ஓயாத பணிகள் இங்கு செய்தால்
ஓய்ந்துவிட்டு ஏனோ மேலே சென்றாய்
தீராத தீயை மூட்டி விட்டாய்
தீர்ந்து போக எங்களை மறந்து விட்டாய்

பணியென்றால் உன் பணிபோல் உண்டோ
பணியிலும் சிறந்ததல்லோ உம்பணி
பேதையின் மனதையும் கவர்ந்ததுவிட்டாய்
பேதையாய் எங்களை தவிக்கவிட்டீர்

ஊரெல்லாம் நாடெல்லாம் உன்பணி
பரவியே ஒலிப்பதை காண்பாய் அப்பா
பாவங்கள் பலவற்றை மற்றவர்கள்
செய்திருந்தாலும்
பவனியில் மன்னிப்பார் எம் இயேசு

பதறுகிறோம் கதறுகிறோம்
உன் நினைவை
மாற்றிடவே முடியவில்லை எம் நினைவில்
உன் ஆவி ஆண்டவரே ஏற்றுக்கொள்ள
எம் ஆவியானவரே துதிக்கிறோம் அப்பா
எம் தந்தை உயிர் உம்பாதம் அடைய
வணங்குகிறோம் எம் இயேசு அப்பாவை.

ஊழியக்காரி.
க.பாக்கியவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ඔබ දිවියෙ

ඔබ දිවියේ දෙව්දූ කලදේ
ගැන ස්තුති පුදන්නට
ලියමු මේ නිසදැස ......

සිව්චතුරශ්‍ර සභාවට
පියෙකුට සිටි ඔබ
වෙන්වීම අප අතරින්
කරුණකි සිත් වේදනා දෙන

එහෙත් .........
ඔබ යා යුතු ගමන
නියත වශයෙන්
නොවැලැක්විය හැකිය
දෙව්දූගෙන් ..........

නොසැලෙන ඔබගේ ප්‍රතිපත්ති
කිසිම දෙයකට මෙලොවැති
මතු කලේ ඔබ ඇතුලත
මිනිසාම මිහිරි සුවඳැති ..... .....

දුක් ගැහැට මැඩගෙනා
දිවිය අවසන් වන තුරා
ඒ කල මෙහෙය සම්ටා
පෙන්විය ආදරශය අපටා .........

පුද්ගලිකව අපට
ඔබ දුන්න ඔවදන්
මතක් වනු තවමත්
රැව් පිළි රැව් දෙමින් ..... ......

ඔබ අපට පියෙකුසේ
තව වරෙක මිතුරෙකුසේ
දෙව්දූගේ නියෙමුවෙකුසේ
ගත කලේ නිතර අප සමගිනේ ........

ආත්මික දූ පුතුන් බිහි කර
දෙව් සමිඳු වෙත ඔවුන් යොමු කර
ගියේ හිම් තුරුලට
සදාකල් ජීවනයට ..... ......

ඔබ නැති ශෝකයෙන්
සිටිනා පවුලේ සැමටම
දෙව්දූ කරුණා ලැබුමට
මුළු හදින් කියමු අපි දෙව්දූට .........

දේවගැති ඕ. කුමාරවංශ සහ ලතා කුමාරවංශ
නායක මණ්ඩලයේ සාමාජික
සිව්චතුරශ්‍ර සුභාරංචි සභාව



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දෙව් සමිඳුගේ
ආලෝකයෙන්
ආලෝක වී
එළිය දුන් .... ....
ඒ දයාබර
සෙනෙහසේ
සෙනෙහසක්වී
සැවොම සැනසූ .... ....
දයාබර පියකුසේ
අප අතර රැඳි උන්

වෙන් වුවත්
අප වෙතින් .... ....
මහගු වූ
සම්පතකි දැන් .... .....
සමිඳුන්ට පමණක්ම

ජාතික කායසීාලයේ සහෝදර,සහෝදරියන්
සිව්වතුරශ්‍ර සුභාරංචි සභාව

මැකී ගිය
සිතාවක
මතක සැමරුම්
අතර ........
සිහි කරමු
ඔබේ ගුණ ........
දයාබර
පියෙකු සේ
අපේ හදවත්
තුලින් ........
සැරී සැරූ
ඔබ මතක
එක් කරයි
කඳුළු බිඳු
අපේ නෙත් යුග වලට ........
එනමුදු
සැනසෙන්නෙමු
ඔබ තනිව
නොවන වග දැන .........
දෙව් සමිඳු
සමග ඔබ
රැඳි හිනැහෙන නිසා .........

ජාතික කායසීාලයේ සහෝදර
සහෝදරියන්
සිව්වතුරශ්‍ර සුභාරංචි සභාව



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்க்கின்றேன்

இரட்சகராம் இயேசுவின் இரட்சிப்பை
இலவசமாய் பெற்றுக் கொண்டதும்
இரட்டிப்பான ஜனங்களை - என்
இயேசுவுக்காய் தேடுவேன் - என

தேடினீர் ஓடினீர்
தேவனின் வார்த்தையை
தேனிலும் இனிமையாக
சுவையாக கூறுவீர் !

அன்றொருநாள்
அனைவரும் சூழ்ந்திருக்கும் - வேளை
அடியாள் என்னை கவர்ந்தது
அடியான் உமது தேவ செய்தியே!

இன்னும் அநேகம் கற்க ஆவல்
இறைவனிடம் நீர் சேர்ந்தீர் என சேதி !
இதைக்கேட்ட என்னுள்ளம் பதைத்தது!

இறைவனாம், இயேசு
இவ்வுலகு வருகையில்
இனிய நண்பனாய்,
இயேசுவோடு, நீரும் வருவீர் !

ஊழியக்காரி
P. R. கமலேஸ்வரி
அங்கிலிக்கன் திருச்சபை
பரிமரியாள் ஆலயம், நாவற்குடா.

## போய் விட்டார்.......

போய் விட்டார் என் தகப்பன்
போய்விட்டார்
பொறுமையோடு வாழ்ந்து
முடித்து போய் விட்டார.

பூமியில் அவர் செய்த
தொண்டுகள்தான் எத்தனையோ

வெறுத்து விரட்டப்பட்ட
விரக்தியரை ஆற்றித்தேற்றும்
அன்பரல்லோ போய்விட்டார்
அவரின் நினைவால் வாடி நிற்கிறோம்

ஆறாத்துயரம் அவர் பிரிவால்
கொண்டாலும் அமைதிகொண்ட
நெஞ்சங்கள் தவித்தாலும்
ஆண்டவனின் பணியை முடித்தவர்
எமைவிட்டு போய் விட்டார்

உறுதியான ஓட்டத்தை முடித்தவராய
என் தகப்பன்
அப்பன் இயேசுவின்
மடிக்கே போய் விட்டார்

ஊழியக்காரி
வீ. தேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் உடமைகள்

அன்பின் மறுபெயர்தான்
வண. D. O. G. சோமசுந்தரம்
அன்பு என்ற சொல்லின்
வரை விலக்கணத்தை
அன்று - உன்
கண்களில் வாசித்தேன்

பொறுமை கூட போட்டி போட்டு
பொறுமையை இழந்து விட்டது
உன் பொறுமையில்
ஆதலால்
நீ அருமையானவன்

ஆபிரகாமுக்கே
அப்பனாக வேண்டியவன்
காரணம் - நீ
விசுவாசத்தில் வீரன் என்பதால்

சிந்தித்துக் கொண்டே
சிரிக்கும் சிரிப்பில்தான் - உன்
சிறந்த ஞானம்
சித்திரிக்கப்பட்டது.

Sis. M. கவிதாதேவி

## உயிர் மூச்சு

சோதனையில் - உன்
பொறுமையும்
கோபத்தில் - உன்
அன்பும்
சிந்தனையில் - உன்
சிரிப்பும்
காத்திருப்பில் - உன்
விசுவாசமும் தான்
வியக்கத்தக்க விசுவாசங்கள்

வாழ்க்கைக்கு
வழிகாட்டிய
வான் வெள்ளி - நீ

ஊழியத்தில்
உயிரூட்டிய
உயிர்மூச்சு

வேதத்தை
விளக்கிய
விஞ்ஞானம் - நீ

போதனைகள் - பல
தந்த
பொன் விளக்கு - நீ

உன்
போதனையில் - நான்
அறிய வேதனைகள்
எத்தனை

**Rev. S. Sivawathany**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரகாசிக்க வைத்த ஒளிவிளக்கு

வாழ்விற்கெல்லாம் வள்ளல் நீயே
வழுவாமல் வந்த வீரரும் நீயே
ஏங்கி நின்று தவிக்கும் மக்களை
ஏழ்மை மனதோடு ஏற்கும் துணையே

ஆற்றதுணையின்றி
அழுத கண்களோடு வரும்போது
அன்பாய் ஏற்று அணைத்தெடுத்து
வாழ்க்கையை ஏற்றிவைத்தீர்

உமது பிரிவு எம்மை கலக்கினாலும்
நீர் ஏற்றி வைத்த சுடர் ஒளிர்கிறது.
சென்றடைந்த ஆண்டவரின்
பாதத்தண்டைக்கு
என்றோ ஒருநாள் குடும்ப சுடரோடு
விரைந்து வந்து
வந்தனம் செலுத்துவேன்.

உதவாக் கரையென்று
உலகம் வெறுக்கையில்
உதவி செய்து ஊழியம் தந்தீர்
தப்பி தவறி தவறுகள் செய்தாலும்
தாழ்மையோடு மன்னித்து ஏற்பீர்

அன்பின் ஊழியக்காரன்
ஆர். உதயகுமார்.

*போதகர் D.G.சோமசுந்தரம்,*

*எங்கள் குடும்பத்துடன் ஒரு நெருங்கிய உறவை வளர்த்து வந்துள்ளார். திரு சோமசுந்தரம் மாஸ்டர் அவர்கள். அன்னார் எம்முடன் மட்டுமல்ல அன்புவழிபுரம் விசுவாசிகள் யாவருடனும் நெருக்கமாக வாழ்ந்து ஆவிக்குரிய ஜீவியத்திலும் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார்.*

*துவரங்காட்டு மக்கள் மத்தியில் மேடு பள்ளம் பாராமல், வெயில் மழை என்று பாராமல், கஸ்ப்பட்டு எம் மாஸ்டர் அவர்கள் எமது சபைக்கு வரும்போது பிள்ளைகள் அவரை "நத்தார் பாப்பா" என்றே அழைப்பர். காரணம் பிள்ளைகள் அவருடனும், அவர் பிள்ளைகளுடனும் அன்பாய்ப்பழகுவதால், வறிய விசுவாசிகளுக்கு தனது பணத்தில் உதவிகள் செய்துள்ளார்.*

*அன்புவழிபுர ஆலயத்தில் அன்னாரின் பங்கு விசேமானது எங்களுக்கு நிரந்தரமாக ஆராதிரக்க இடமற்றிருந்த போது எங்களுடன் சேர்ந்து கண்ணீருடன் ஜெபித்தார். அந்த ஜெபத்தை ஆண்டவன் கேட்டு அமெரிக்காவிலுள்ள ஒரு சகோதரியுடன் பேசி இன்றுள்ள ஆலயத்திற்கான இடத்தை வேண்ட உதவி செய்தார்.*

*மாஸ்டர் அவர்களின் இழப்பு என்றும் ஈடு செய்ய முடியாத ஒன்றே.*

*லூயிஸ் குடும்பம்*
*அன்புவழிபுரம்,*
*திருகோணமலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயத்தின் நினைவலைகளிலிருந்து........
## அருட்திரு. D.G.S. பற்றி......

1814ம் ஆண்டு ஜுன் மாதம் 29ந் திகதி இலங்கை மண்ணில் இயேசுவின் நாமம் அருளப்பட்டதிலிருந்து நாலாபக்கமும் சுவிசேடப்பணி மிஷனரிமாரால் மிகவேகமாகப்பரவிய வேளையில் குருமண் வெளியிலும் சுவிசேடப்பணி தொடங்கியது. அவ்வேளையில் அங்கு பிரபல சைவ மதப் பெரியாரும் சுதேசவைத்தியருமான திரு. கிஸகிந்தாதாஸ் சீனித்தம்பி என்பவரும் அவரின் மனைவி சோபாயா வள்ளிப்பிள்ளை என்பவரும் ஆண்டவரினால் தொடப்பட்டு ஆதிக் கிறிஸ்தவர்களாக ஞானஸ்தானம் பெற்றனர்.

அவர்களின் அடிவேரிலிருந்து கடைசி மகளாகப் பிறந்தவர் அனா. முத்தம்மா என்பவருக்கும் திரு. S.S, சோமசுந்தரம் உபதேசிகர் அவருக்கும் அன்பு மகனாக 1927 ஆகஸ்ட் 07 ல் பிறந்தவர் தான் அமரத்துவம் அடைந்த திரு. D.G. சோமசுந்தரம், (குணம்) என்பவராகும் இவரின் தந்தை மிகவும் பிரபல்யம் வாய்ந்த புலவராகவும், நாடக ஆசிரியராகவும் உபதேசியார் ஆகவும் இலங்கையில் பல பகுதிகளிலும் தேவ ஊழியம் புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்று 1947ம் ஆண்டு நான் குருமண்வெளி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் S.S.C வகுப்பில் இறுதியாண்டு மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தகாலம் இன்றும் எனது மனதில் இருப்பவை திரு. D.G.S (குணம்) அவர்கள் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்வியை முடித்துக் கொண்டு ஆசிரிய பயிற்சியை முடித்த காலம் எனலாம்.

அப்பொழுது குருமண்வெளி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தலைமை ஆசிரியராக 25 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய முகாந்திரம் J. S. இளையதம்பி அவர்கள் திரு. D.G.S அவர்களின் பெரிய தந்தையும் ஆவார். அப்பாடசாலையின் "பெற்றார் தினவிழா" ஒன்றை வெகுவிமர்சையாக வைப்பதற்கான ஒழுங்குகள் திரு. D.G.S இடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் நடன, நாடக, இசை நிகழ்ச்சிகளும் மற்றும் ஆங்கில நிகழ்ச்சிகள் உடற்பயிற்சி பிரமிட் போன்ற காட்சிகளும் இவரினால் தயாரிக்கப்பட்டு மேடையேறின. அந் நாடகங்களில். அசோகவனத்தில் சீதை "நளதமயந்தி" மயானத்தில் அரிச்சந்திரன், புகழேந்தியார், ஆகியவை இலக்கிய பின்னணியாகக் கொண்டு தயாரித்தவைகள் இதில் புகழேந்தியார் பாகத்தை என்னை ஏற்று நடிக்குமாறு பணித்தார். அத்துடன் கோலாட்டம், கும்மி, கரகாட்டம், காவடியாட்டம், போன்ற கிராமிய கலை நிகழ்ச்சிகளையும் பழக்கி சிறப்புற நடத்திய பெருமை D.G.S குணம் அவர்களையே சாரும்.

அருட்திரு. D.G.S. அவர்கள் கடந்த 2000 - 06 - 08ல் திகதி இறைவனிடத்தில் சேர்ந்துவிட்டார். எனினும் அவரின் இழப்பு எங்களுக்கு உயிர்ப்பாக இருக்கின்றது.

அவரின் ஜீவிய நாள்முழுவதும் தன்னைத் தேவபணிக்கு என்றே ஒப்படைத்த இவர் அவரின் இழப்பை தொடந்து மேற்கொள்ள அவரின் மகன் நிரஞ்சன் அகில இலங்கை நாற்சதுரசபையின் உபதலைவராக பணியாற்றுவது தந்தையின் பின் மைந்தன் என்பதற்கு இணங்க விளங்குகிறார்.

திரு D.G.S நிச்சயமாக பரிசுத்தவான்களின் கூட்டத்தாரோடு இணைந்திருக்கிறார் என்பது உண்மை.

உண்மையிலே நீதியின் கிரீடம் அவரில் வைக்கப்பட்டிருக்கிறது என்பது நிச்சயம். ஆண்டவரின் பிரசன்னம் என்றும் நிறைவாக இருப்பதாக...

திரு. க. கோபாலசிங்கம்
குருமண்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவருக்குள் நித்திரையடைந்த குணம் அம்மாச்சியைப் பற்றிய ஒரு சிறு கண்ணோட்டம்.

குணம் அம்மாச்சியவர்கள் (D.G. சோமசுந்தரம்) குறுமண்வெளிக் கிராமத்தில் மெதடிஸ்த உபதேசியார். காலம் சென்றவர்களான திரு. சாமுவேல் சோமசுந்தரம் - முத்துக்குட்டி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர்களை இங்குள்ளவர்கள் ஆசிஐயா - ஆசியம்மா, சீனியப்பா - சீனியம்மா, என்றும் குணம் அம்மாச்சியை - தம்பி குணம் - குணமண்ணன் - குணமங்கிள் என்றெல்லாம் அழைப்பார்கள். குணம் என்ற பெயருக்கேற்ப - குணநலம் உள்ளவராக அமைதி நிறைந்த ஒருவராக வாழுந்து வந்தவர் கிறிஸ்தவ பண்பினைக் கொண்டவராக நல்ல ஒரு சிறந்த விசுவாசியாக இறுதிவரை வாழ்ந்தவர். ஆசிரியராக, அதிபராக, ஏன் கிறிஸ்தவ பணியாளனுமாக வாழ்ந்து சமுதாயத்திற்கு ஏற்ற ஒரு தலைவனாக, குடும்பத்திற்கும் ஏற்றவொரு தலைவனாக, கணவனாக, தந்தையாக, இறுதிவரை வாழ்ந்தவர்.

1992ம் ஆண்டு குணம் அம்மாச்சியவர்கள் எழுதிய "வெற்றியின் வழி" எனும் நூல் வெளியிட்டு விழாவிலே எனது மதிப்புக்குரிய ஆசிரியரும், முன்னாள் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபரும், முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பிரின்ஸ் ஐயா அவர்கள் ஆற்றிய உரை ஞாபகத்திலிருக்கிறது.

அவர் இவ்விழாவில் உரையாற்றும் போது **D.G. Somasundaram** என்பதற்குரு வரைவிலக்கணத்தைக் கொடுத்து உரையாற்றினார். **D.G.S D - Devoted, G - God, S. Servent** - "Devoted God Servent" கடவுளுக்காக அர்பணிக்கப்பட்ட பணியாளன் என்று வர்ணித்தார்.

உண்மையிலேயே கூடியவரை இறுதி மூச்சு வரைக்கும் ஆண்டவருக்கு ஏற்ற அடியவனாக ஒரு பணியாளனாக வாழ்ந்து ஆண்டவருக்குள் நித்திரையடைந்திருக்கிறார். அவர் ஆற்றிய எல்லாப்பணிகளுக்கும் ஆண்டவருக்கே துதி.

அருட்திரு. A.R. ஜெயராஜ்
குறுமன்வெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ நிர்வாகியாக......

மீன்பாடும் தேன்நாடாகிய மட்டக்களப்புத் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்ட இப்பெரியார். அறிவுச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் அவதரித்தார். அதற்கேற்ற கல்வியும் கற்றார். தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் குறிப்பிடத்தக்க விசாலமான பரந்த அறிவைப் பெற்றுத் திகழ்ந்தார். சங்ககால நூல்களிலென்றாலும் தற்காலக் கவிதைகளிலென்றாலும் சோமசுந்தரம் ஐயா அவர்களுக்கிருந்த புலமை ஆழமானது, நுண்ணியது என அவர்காலத்தில் வாழ்ந்த புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் பண்டிதர் வீ. சி. கந்தையா அவர்கள் போன்ற ஆய்ந்தவிந்தடங்கிய சான்றோர் பெருமக்கள் பாராட்டியுள்ளனர்.

சம்பூர் மகா வித்தியாலயத்தின் சிருஷ்டிகர்த்தா திரு. டி. ஜீ. சோமசுந்தரம் ஐயா அவர்களே என்றால் மிகையாகாது. இப்பாடசாலையை ஒரு சிறந்த ம. வி. யாலயமாகத் தரமுயர்த்துவதற்கு இப்பெரியார் மேற்கொண்ட முயற்சிகள் அளப்பரியன. சம்பூர்க் கிராமச் சபையின் முன்னாள் தலைவராக இருந்த அமரர் நா. சி. சரவணமுத்து அவர்களும், அதிபர் ஐயா அவர்களும் அக்காலகட்டத்தில் தமது நிதிக்கஷ்டம், போக்கு வரத்துக் கஷடம், போன்ற இன்னோரன்ன பல தடைகளுக்கும் மத்தியில் இப்பாடசாலையை மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தும் கடுமையான முயற்சியில் ஈடுபட்டுழைத்தனர்.

இப்பெரியாருடன் ஆசிரியர் பணிபுரியும் பெரும் பாக்கியம் இறையருளால் அடியேனுக்கும் கிட்டியது சம்பூர் ம. வி. யில் பணி புரிந்த போது, ஐயா அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருட்காட்சி விழாவும் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை உவர்கள் பங்குபற்றிய நவராத்திரி விழாவும் இன்னும் என் மனத்தை விட்டகலாத கண் கொள்ளாக் காட்சிகளாகவே நிற்கின்றன. கைவேலைகளிலும் எழுத்துத் துறையிலும் இவருக்கு நிகர் இவரேதான்.

அன்பின் உறைவிடமாய். அறிவின் சிகரமாய், சமயோசிதமாக எவருடனும் பழகும் நற்பண்புகள் நிறைந்தவராக அதிபர் ஐயா அவர்கள் தம் கடமைகளை நிறைவேற்றினார் எனது 35வருட ஆசிரியர் அதிபர் சேவைக் காலங்களில் நான் கண்ட, விரல்விட்டு எண்ணக்கூடிய சிறந்த முகாமைத்துவ நிர்வாகிகளில் திரு.டி. ஜி. எஸ். ஐயா அவர்கள் முதன்மையானவராகும்.

சம்பூர்க் கிராமம் செய்த புண்ணியமே திரு. டி. ஜி எஸ். ஐயா அவர்கள் அதிபராக வாய்த்தமை. அவர் என்னுடன் கலந்துரையாடும் போது அடிக்கடி கூறுவார். ஒரு நல்ல அதிபர் உள்ள கூடாத பாடசாலையும் இல்லை, ஒரு கூடாத அதிபர் உள்ள நல்ல பாடசாலையும் இல்லை என்று இது அவரது அனுபவ முதிர்ச்சிக்கு முத்திரை குத்துவதாக அமைகிறது.

இத்தகைய அறிவும் ஆற்றலும் அனுபவ முதிர்ச்சியும் முகாமைத்துவ நிர்வாகத் திறனும் ஒருங்கே அமைந்த இப் பேறறிஞர் நம் மத்தியில் இல்லாதது குறித்து வேதனைப்படுகின்றோம் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கின்றோம்.

ரா. கோணாமலை
கட்டைபறிச்சான்
மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புக்குரிய திரு. சோமசுந்தரம்
## - சில மனப்பதிவுகள்-

பேராசிரியர். சி. மௌனகுரு

திரு.சோமசுந்தரம் அவர்கள் எனக்கு 1992ல் அறிமுகமாகின்றார். பிரமிளாவின் அப்பாவாக, சுகுமாரின் மாமனாராக, ஏஞ்சலின் பாட்டனாக. அவரது முதல் அறிமுகம் நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது.

பரந்த முகம்;புஷ்டியான உடல்; எபபோதும் புன்னகை; மென்மையான பேச்சு. முகத்தைவிடப் பரந்த மனசு உடலைவிடப் புஷ்டியான சிந்தனைகள். இனிமையான கதைகளும் அருமையான உணவும் உபசரிப்பும் அவரோடு ஒரு நெருக்கமான உறவினை ஏற்படுத்தின.

உபசரிப்பும் உரையாடலும் அவரிடமிருந்து நாம் கற்க வேண்டியவை.

அவருக்கும் எனக்குமிடையே பல கருத்துகளில் உடன்பாடுகளும், முரண்பாடுகளும் இருந்தன. இருவரும் அதை அறிந்திருந்தோம். உடன்பாடான விடயங்கள் பற்றியே அவர் உரையாடுவார். முரண்பாடுகள் பக்கம் பேச்சைத் திருப்பார். இதனால் உறவு வளர மேலும் சாத்தியப் பாடுண்டாயிற்று. முரண்பாடுகளைப் பெரிதுபடுத்தி துயரங்களையும், பகைமைகளையும் வளர்த்துக் கொள்ளும் இவ்வுலகில் உடன்பாடுகளைப் பெரிதுபடுத்தி நட்பை வளர்க்கும் அவர் பண்பு இளைய தலைமுறை அவரிடம் கற்க வேண்டிய பண்பு.

திருமதி சோமசுந்தரம் பண்பாளர். பழகுவதற்கு இனியவர். ஆனால் மிகுந்த கண்டிப்புமிக்கவர். திரு.சோமசுந்தரம் முன்னைய இரு பண்புகளுடன் நெகிழ்ச்சி மிகுந்தவர். கண்டிப்பு, ஒரு துருவம்- நெகிழ்ச்சி மறு துருவம் இரண்டு எதிர்மறைகளின் இணைப்பிலே தான் உலகம் இயங்குகிறது. அருமையான இணைப்பு இத்தம்பதியினர்.

அறுபது வயதை இவர்கள் தாண்டி விட்டனர். என்பன நம்ப முடியாத ஒரு வாழ்க்கை. அவர்கள் இருவரையும் தனித்தனியாகக் கற்பனை செய்ய முடியவில்லை. சேர்ந்தே செல்வர், சேர்ந்தே இருப்பர், சேர்ந்தே உண்பர், சேர்ந்தே உறைவர், அறுபது வயது தாண்டினாலும் இருபது வயதுத் தம்பதியருர் போல சிரிப்பு, மகிழ்ச்சி, உறவு, அன்பு, காதல் என்பன தம்மைச் சூழ வாழ்ந்தனர். வாழ்வை அனுபவித்தனர். வாழ்வின் சுவையை அளித்தனர், அதை மற்றவர்களுக்கு ஊட்டினர், பிரசரத்தால் மாத்திரமல்ல; தாம் வாழ்ந்த முறைமையினாலும். திருமணம் செய்து பத்து வருடங்களுக்குள் பல்வேறு பிரச்சினைகளுகக் முகம் கொடுத்து அலுத்துப் போகும் இன்றைய தலைமுறை இவர்களிடமிருந்து கற்க வேண்டியவற்றுள் இது ஒன்று.

இருதய சத்திர சிகிச்சை முடிந்து நான் வீடு வந்த போது திரு.சோமசுந்தரம் இணைபிரியாத தன் துணைவியாருடன் என்னைப் பார்க்க வந்திருந்தார். எனக்காகத் தான் பிராத்தித்தைக் கூறினார். "நீங்கள் நீண்ட நாள் இருக்க வேண்டும். செய்வதற்கு நிறைய இருக்கிறது" என்று உற்சாகம் தந்தார். என்னைப் போல அவருக்கும் இருதயப் பிரச்சினை இருந்தது. அது பற்றிய தீர்க்கமான முடிவும் அவரிடம் இருந்தது. 'எங்கள் காலம் முடிந்து விட்டது' என்றார். மரணத்தை அவர் பயமின்றி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மரணபயணமற்ற வாழ்வு அவர் வாழ்வு. அவரிடமிருந்து நாம் கற்க வேண்டிய இன்னொரு பண்பு இது.

தன் வாழ்வையே செய்தியாக விட்டுச் செல்பவர்கள் மிக அருமை. திரு.சோமசுந்தரம் தன் வாழ்வையே நமக்குச் செய்தியாக்கிச் சென்றுள்ளார். அவரது வாழ்வே அவரது போதனைகள். அவருடைய அன்புக்குரிய பேர்த்திமாரில் ஒருத்திதான் ஏஞ்சல் அநாமிகா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமிளா - சுகுமாரின் புத்திரி. அவளுடன் பழகுகையில் அவரது பரந்த முகம், புஷ்டியான உடல் அவரது பரந்த மனம் புஷ்டியான சிந்தனைகள் அன்பு, பாசம், உபசரிப்பு, (கூடவே பாட்டியாரின் கண்டிப்பு) அனைத்தும் தெரிகின்றன.

அப்பனே மகனாகி, மகளாகி வளர்ந்து வருதல் தான் மனித குலத்தின் தொடர்ச்சி. மனிதர்கள் இறப்பதில்லை. தம் வாரிசுகள் மூலம் அவர்கள் உயிர்வாழ்கிறார்கள். திரு. சோமசுந்தரம். பேர்த்தியார் ஏஞ்சல் அநாமிக்காவுக்கூடாகவும், தம் ஏனைய பேர்த்திமார் பேரன்மாருக்கூடாகவும் உயிர் வாழ்கிறார். இச் சிறுசுகள் உருவாக்கவிருக்கும் சந்ததியினருக்கூடாக அவர் உருவும், குணமும், சேவையும் தொடர்ந்து இருக்கும். அவருக்கு அழிவில்லை.

***

# நான் அறிந்த போதகர்

அங்கிள் சோமசுந்தரம் அவர்களிடமிருந்து, நான் அனேக காரியங்களைக் கற்றுக் கொண்டேன். அவருடைய ஜீவியத்தில் அனேக பிரச்சினைகள், துன்பங்கள். வேதனைகள், காணப்பட்ட பொதிலும் அவர் ஒருபோதும் சோர்ந்து போகவில்லை. அவருடைய முகத்தில் எப்பொழுதும் புன்முறுவலும், அமைதியான பேச்சும். தெய்வீக சமாதானத்துடனும் காணப்படுவார். இவர் ஒருபோதும் ஏற்றத்தாழ்வு. சாதி. சமயம். மொழி பார்த்ததில்லை. அனைவருடனும் அன்புடன் வரவேற்று உபசரிப்பார். இவரின் மனைவியும், முக மலர்வுடனும், சந்தோசத்துடனும் அங்கிளுக்கு ஒத்தாசை கொடுப்பார். எங்கு சென்றாலும், இருவரும் இணைந்துதான் செல்வார்கள். ஒருபோதும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதில்லை. அங்கிள் அவர்களிடமிருந்து நான் கற்றுக் கொண்டது உண்மையையும், தேவ பலத்தையும். அவர் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் ஜெபத்தின் மூலமே செய்வார். என்னதான்பிரச்சினை வந்தாலும் ஒருபோதும் ஜெபத்தையும் வேத வாசிப்பையும் விட்டு விட்டதெ இல்லை. சபையைக் குறித்த பெரிதான பாரம் அவரவர் இருதயத்தில் இருந்தது. அவருடைய வயோதிபக் காலத்தில் பொதுக்கூட்டங்கள், ஆவிக்குறிய போராட்டங்கள், வேதப்படிப்பு, உபவாசக் கூட்டங்கள் பேன்றவற்றினூடாக சபை மக்களை உற்சாகப்படுத்தி வந்தார். ஞாயிறு ஆராதனை ஆரம்பிப்பதற்கு முன்னதாக முன் வாசலில் நின்று கொண்டு புன்முறுவலோடு சபையினரை வரவேற்பார். ஆராதனை முடிந்தும் சபையினரின் பிரச்சினைகளைக் குறித்து விசாரிப்பார். பின் ஜெபித்து அனுப்புவார். அவருடைய அமைதியான நடையில் துள்ளித் தளிர்த்திடும் தேவ ஞானம், அவர் வேத பண்டிதரும் கூட. அவருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையும் வேத வசனமாகவே இருக்கும். மாலை நேரங்களில் முற்றத்தில் நாற்காலிகளை வட்டமாக. போட்டு, உட்கார்ந்து பேசுவதுண்டு. அந்நேரங்களில் தமது கடந்த கால ஊழிய அனுபவத்தைக் குறித்தும் பேசுவார். அது மாத்திரமல்ல. ஆலோசனைகளும் தருவார். அவரோடு இருந்த ஒவ்வொரு நிமிடமும் எனது வாழ்க்கைக்கு. தேவையான பாடங்களைக் கற்றுக் கொண்டேன். அங்கிள் சோமசுந்தரம் இந்த உலகை விட்டுப் போனாலும் அவருடைய அன்பும், ஜீவியமும், நினைவுகளும் எம்மை விட்டுப் போகவில்லை.

**Bro.**ஞானதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயத் தொண்டராக

அண்மையில் அமரத்துவம் அடைந்துள்ள அமரர். டி. ஜி. சோமசுந்தரம் அவர்கள் என்றும் நினைவில் நின்று நீங்காத பெருந்தகையாகும். சமயத்தொண்டு செய்ததோடு நின்று விடாது சமூகப் பணியிலும் ஈடுபட்டுவந்த பெரியாராகும். இவரது இலக்கிய ஆர்வத்தினை அன்னாரால் இயற்றப்பட்ட ''வெற்றியின் வழி'' என்ற கவிதை நூலில் கண்டு தெளியலாம். சமயக்கருத்துக்களை எடுத்துக்கூறுவதற்குப் பாடல்கள் சிறந்தவை என்பதைக் கண்டுகொண்ட இவர் சிறந்த எடுத்துக் காட்டுக்கள் மூலம் சமய உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்.

சமயப்பணியில் ஈடுபடுவதற்கு முன்னர் கல்வி உலகிற்குப் பெரும் சேவைபுரிந்துள்ளார். கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற காரணத்தினால் இவரால் இயற்றப்பட்ட ''வெற்றியின் வழி'' என்ற நூல் சிறப்பம்சங்கள் பலவற்றைக் கொண்டதாக விளங்கியது. கல்வி பண்பாட்டலுவலகள் விளையாட்டுத்துறை அமைச்சும் அன்னாரது நூலைக் கொள்வனவு செய்து பாடசாலை நூலகங்களுக்கு வழங்கியது. சமயநெறிநின்று வாழ்க்கையைச் செவ்வனே நடாத்தி வந்த இவர் போதனைகள் செய்வதிலும், பிரசங்கங்கள் புரிவதிலும் திறமையுள்ளவராக விளங்கி தமக்கென பல நண்பர்களை வரித்துக் கொண்டார். இனிமையாகப் பழகும் சுபாவம் உடையவர். இவரது பணிகளுக்கு அவரது துணைவியாரும், பிள்ளைகளும் உறுதுணையாகவிளங்கினர். மிகவும் உற்சாகத்துடனும், சுறுசுறுப்பாகவும் தம் பணியில் ஈடுபட்டுவந்த அமரர் சோமசுந்தரம் அவர்களின் மறைவு கிறிஸ்தவ உலகிற்குப் பேரிழப்பாக அமைந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அன்னாரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதோடு, அவரது ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறையருளை வேண்டித்துதிப்போமாக.

எஸ். எதிர்மன்னசிங்கம்<br>
உதவிப் பணிப்பாளர், (பண்பாட்டலுவலகள்)<br>
கல்வி அமைச்சு.

---

எவ்விதத்திலும் தேவனின் ஊழியக்காரன் என்பதை விளங்கப்பண்ணினீர்.

II கொரி 6:3.10

என் ஊழியத்தின் ஆரம்ப நாட்கள் தொடங்கி இன்று வரை என் மனதில் பிரியாமல் என் ஊழியத்தை வெற்றிக்கு முன்னேறிச் செல்ல, எதையும் சகித்துக் கொள்ளவும் சோர்ந்து போகிற நேரம் தைரியமூட்டி உற்சாகப்படுத்தி எந்த அனுபவமும் ஊழியத்தில் இல்லாத எனக்கு தனது சொந்த அனுபவங்களின் மூலம் ஆலோசனைகள், தந்து ஊழியத்தின் பாதையிலே முன்னேறி செல்ல ஊன்றுகோலாய் இருந்தீர். IIகொரி 6:3-10 ன் படி மிகுந்த பொறுமையிலும், நீடிய சாந்தத்திலும், பரிசுத்த ஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்வியபலத்திலும், காலத்திலும் பிரயாசங்களிலும் நீதியாகிய வலதிடது பக்கத்து ஆயுதங்களை தரித்திருக்கிறதிலும், அபுக்கப்படுகிறவர் என்னப்பட்டாலும், எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவராகவும் II கொரி 4:8-10 ன் படி எதையும் தாங்கும் இதயமுடையோனாய் இந்த கனமான ஊழியம் குற்றப்படாமல் தன்னை எப்பொழுதும், எவ்விதத்திலும் தேவனுடைய ஊழியக்காரனாக விளங்கப்பண்ணினீர். உம் பிரிவை யாராலும் எப்போதும் ஈடு செய்யமுடியாது

P.கிறிஸ்துகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசானுக்கு
# என் விழிநீர் அஞ்சலி

ஒருவர் உயிருடன் இருக்கும் போது அவரை நினைப்பதைவிட அவர் அமரத்துவம் அடைந்த பின்னர் அவரை நினைப்பது, அவரின் திறமைகளை யாரிடமாவது பேசுவது என்ற போக்கு, பொதுவாகச் சமூகத்தில் ஒரு வழமையாக இருக்கிறது. காரணம் அவர் அமரத்துவம் அடைந்த பின்னர் ஏற்படும் நிரப்ப முடியாத வெற்றிடம் ஏற்படுத்துகிற தாக்கமே எனலாம்.

இந்த விதத்தில் என்மனத்தை ஒரு தாக்கத்துக்குள்ளாகி விட்டது. என் ஆசானின் மறைவு - மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியில் எட்டாம் வகுப்பில் எனக்குக் கற்பித்தவர் நான் இந்த நிலையில் இன்று இருப்பதற்கு அவரும் ஒருவர் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கின்றேன். வாழ்வில் முன்னேற வழிகாட்டியவர்களை நான் என்றும் மறப்பதில்லை. இவர் பாடஆசிரியராகவும், வகுப்பாசிரியராகவும் இருந்தவர். பாடஆசிரியராகவும் மட்டும் இருந்திருப்பாரேயாகில், ஒருவேளை எமது உறவு மட்டுப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் வகுப்பாசிரியராகவும் இருந்ததனால் எமது உறவு விரிவாகவும் இறுக்கமாகவும் அமைந்தது.

மாணவர்களைப் பொறுத்தவரை கற்பிப்பவர்கள் யாவரும் அவர்களின் மனத்தில் நிலை நிற்பதில்லை. ஆனால் என் ஆசான் - அமரர் டி. ஜீ. சோமசுந்தரம் அவர்கள் உள்ளத்தில் நிலை நிற்கும் ஒருவர். அந்த வகையில் என் உள்ளத்திலும் நிலை நிற்பர் ஆசிரியராக, பின்னர் அதிபராகப் பதவி உயர்ந்து நன்கே கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர் தன்னை முழுமையாக இறைபணியிலும் இணைத்து பிணைத்துக் கொண்டவர்.

கொடுக்கக் கொடுக்கக் குறையாத கல்வியை எனக்குக் கொடுத்து விட்டுச் சென்ற என் ஆசானுக்கு என் விழிநீர் அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

எஸ். எஸ். மனோகரன்.
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு மாவட்டம்,

மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் அலுவலகம்.
மட்டக்களப்பு.
23. 06. 2000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துலகில் டி. ஜி. சோமசுந்தரம்

சிறந்த சமய போதகராக, சமூக சேவையாளராக குடும்ப நிர்வாகியாக நன்கறியப்பட்டவரான அமரர் வண. டி. ஜி சோமசுந்தரம் அவர்கள் மட்டக்களப்பு பிரதேசத்தின் குறிப்பிடத்தக்க படைப்பாளராகவும் திகழ்ந்தவர் இது பலருமறியாததொன்று

டி. ஜீ சோமசுந்தரம் அவர்கள் மட்டக்களப்பு பிரதேசத்தின் குறிப்பிடத்தக்க ஒரு கவிஞர். மொழிபெயர்ப்பாளர், கட்டுரையாளர் இவ்வாறெல்லாம் அவர் நிகழ்வது ஆச்சரியத்திற்குரியதொன்றன்று ஏனெனில் அவரது தந்தையாரான சோமசுந்தர தேசிகர் (1885-1982) சிறந்த புலவர், நாடக ஆசிரியர், அண்ணாவியார், இவை காரணமாக பண்டிதர் வி.சி கந்தையா எழுதிய மட்டக்களப்புத் தமிழகம் என்ற ஆய்வு நூலில் இடம் பெற்றுள்ள புலவர்கள் சிலருள் ஒருவரானவர்

"தந்தை வழியிலே தனயனும்"! அன்றைய இலக்கியச் சூழலும் மட்டக்களப்பு எழுத்தாளர் ரீ. எஸ். பாக்கியநாதன் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான எஸ் டி. சிவநாயகம் ஆகியோர் ஊடாக அன்னாருக்கு ஏற்றதாக வந்து வாய்த்தது.

விசுவாச கிறிஸ்த, சமய பாடல்கள் பல இயற்றினார். டீ.ஜீ. அவர்கள். அவரது பாடல்களுள் சில "வெற்றியின் வழி" (1992) என்ற நூலாக வெளிவந்துள்ளது. அந்நூல் வெளியிட்டு விழாவிலே ஆய்வுரை நிகழ்த்தும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது அவ்வேளை அந்நூலிலுள்ள பாடல்கள் சில வற்றின் குறைகளைச் சுட்டிக் காட்டினேன் அவ்வேளை அமைதியாக இருந்தவர் டி. ஜீ அவர்கள்.

அன்னார் ஆழ்ந்த அமைதியில் இருக்கும் இவ்வேளையிலும் அந்நூலின் சிறப்புகள் சிலவற்றைச் காட்டுவது பயனுடையது.

அடிப்படையில் சமய நூலாகிய "வெற்றியின் வழி" கிறிஸ்தவ வாழ்வில் வெற்றிக்கான வழி இயேசு ஒருவரே என்ற உண்மையை எடுத்துரைக்கிறது. அத்துடன் வேதத்தில் காணப்படும் முக்கியமான சில உண்மைகளையும் விளக்குகின்றது.

இவைபற்றிய பாடல்கள் எளிமையும் இனிமையும் இசைப்பாங்கும் கொண்டனவாக உள்ளன. என்பதே எமது கவனத்திற்குரியது. இவ்விதத்தில் உற்பத்திக்கும், என்ன கைம்மாறு செய்வோம், உன் நிலை நீயும் உணராயோ, பரிந்து பேச ஒருவர், மலைப்பிரசங்கம், அந்திக்கிறிஸ்து, முதலான பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

பாடல்களுள் சில தாயுமானவர், குமரகுருபரர் ஆகியோரது பக்திப்பாடல்களை நினைவூட்டுவது பாராட்டப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்களை ஈர்க்கும் நோக்குடன் அவர்கள் மத்தியிலே பிரசித்தம் பெற்றுள்ள பாடல் மெட்டுகளைக் (எடு: நந்தவனத்திலோராண்டி, பச்சைமலை, பவளமலை) கொண்டுள்ளன சில பாடல்கள்

மேலும் மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்து மக்களுக்குமுரிய விழுமியங்களும் இவரது பாடல்களிலே இடம் பெற்றுள்ளமை விதந்துரைக்கப்படவேண்டியது. இவ்விடத்தில் பின்வரும் பாடல் எனது நினைவுக்கு வருகின்றது.

"மண்ணில் ஆசை கொண்டு பிறர்
மாண்புறு வாழ்வை மதியாதோர்
விண்ணின் வாழ்வை யடையாரே
விமலன் வாக்கு இதுவன்றோ
கண்ணிலே உள்ள உத்திரத்தை
உணரா தயலான் கண்ணுள்ள
நுண்ணிய துரும்பை எடுத்துவிட
நுழைவது மாந்தர்க் கழகாமோ?"

தவிர கவிஞரால் ஆங்கிலத்திலிருந்தும் சில பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. "தெரிந்து கொள்ளப்பட பாத்திரம்" என்றதொரு பாடல்

சமயக் கட்டுரைகளும் டி. ஜீ. அவர்களால் எழுதப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. அவ்வாறெனில் அவை நூலுருப் பெறுவது அவசியமானது. அவ்வாறே அன்னாரது ஏனைய பாடல்களும் நூலுருப்பெறவேண்டும். ஈழத்தில் கிறிஸ்தவ சமய இலக்கியங்கள் குறிப்பாக செய்யுள் நூல்கள் பெருமளவு வெளிவராத சூழலில் இவற்றின் வரவு டி. ஜீ. அவர்களுக்கு ஈழத்துப் படைப்பாளர் வரிசையில் நிரந்தரமானதொரு இடத்தை வழங்குவதற்கு வழிவகுக்கும் என்று கருதுகின்றேன்.

மட்டக்களப்பு பிரதேசப் படைப்பாளர் சார்பிலே அன்னாரது ஆத்மசாந்திக்காக பிராத்திக்கின்றேன்.

கலாநிதி.
செ. யோகராசா

❀ ❀ ❀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அஞ்சலி

உலகில் தோன்றிய ஒருவர் ஒருநாள் மறைவார் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். ஒருவர் மறைந்தாலும் அவர் செய்த சேவைகள் காலத்தால் அழியாது என்றும் நிலைத்து நிற்கும் அவ்வகையில் திரு சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய சேவைகள் என்றும் அழியாது நிற்கும் என்பது திண்மம் என்றும் நினைவு கூரத்தக்கதாக விளங்கும். அன்னாரின் மறைவு எங்களுக்கு ஓர் கனவு போல் இருக்கிறது மனம் சஞ்சலப் படுகின்றது. வேதனையடைகின்றது. இவர் பண்புக்கு ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தவர் சிறந்த அறிவாளியாகவும் ஆசானாகவும் விளங்கியவர். தான் செய்த வேலையை கருமமே கண்ணாகச் செய்வார். எப்பொழும் சுறுசுறுப்பாகவே இருப்பார். எனக்கு இவர் அதிபராக, கல்வி அதிகாரியாக இருந்த காலத்திலேயே நன்கு அறிமுகமாகியவர் இவரின் துணைவியார். திருமதி சோமசுந்தரம் அவர்கள் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அதிபராகப் பதவி ஏற்ற காலம் தொடக்கம் நன்கு பழகும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. பாடசாலை அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்தவர்.

எங்கள் குடும்ப நண்பராகவும் விளங்கினார். எளிமையான தோற்றமும் புன்னகை தவழும் முகமும், யாருடனும் அமைதியாகவும் பண்புடனும் பழகும் தன்மையுடையவர் சிறந்த புலமையுடையவராகவும் சமயப் பற்றுடையவராகவும்; விளங்கினார். இவர் தாம் கைக்கொண்ட சமயப் பற்றுக் காரணமாக மத குருவாக விளங்கி கடைசி வரையும் சேவையாற்றினார். இவர் ஆற்றிய சேவைகள் நாம் என்றும் மறக்க முடியாது அவரின் அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும் அவரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திப்போமாக

திருஞானசம்பந்தர் குடும்பம்
திருகோணமலை

---

## நினைவில் வாழ்கிறாய்

எப்படி ஐயா உமை நாம் மறப்பது. உன் சிரித்த முகமும் தெளிந்த உருவமும் எம் கண்ணை விட்டு எப்படி ஐயா நீங்கும் உன் புன் சிரிப்பும், கூறும் வார்த்தைகளும் இப்பவுமல்லவா எம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. நான் மட்டுமா எத்தனை உள்ளங்கள் உம் இழப்பால் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றேன். நீ சாதாரண மனிதனல்ல, மனிதருள் மாணிக்கம், மனிதம் கொண்ட மானிடன் நீ. உன் அறிவுரை கேட்டு போதனை கேட்டு எத்தனை பேர் ஞானம் பெற்றுள்ளனர். எத்தனை பேர் வாழ வழி கண்டுள்ளனர். மற்றவர் மனம் நோகாதவாறு நீ கூறும் அறிவுரைகளில் காட்டும் வழிமுறைகளில் எத்தனை போ பாசத்தைக் கண்டார்கள். அன்பு என்பதற்கு நீ அல்லவா அடைமொழியானாய் நீ காட்டும் கருணைக்காக எத்தனை ஏழைகள் ஏங்கி நின்றாகள். நீ ஏழைகளில் தெய்வத்தைக் கண்டவன். ஏழைகளோ உன்னிலல்லவா தெய்வத்தைக் கண்டார்கள். மனிதாகள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உன் வாழ்வல்லவா யாப்பு.

தெளிந்த சிந்தையும் முதிர்ந்த அறிவும் அனுபவமும் கொண்ட நீ குழந்தை போலல்லவா, எம்மத்தியில் குதூகலித்திருந்தாய். உன் எழுத்துக்களே அறிவுக்கும் புலமைக்கும் சான்று " இன்ப வாழ்வு" ஏட்டில் ஏறுமுன் நீ அல்லவா இன்பம் எய்தி விட்டாய் இறைவனிடம் சேர்ந்த விட்டாய் கவிஞனே மாமனிதரே உன் இடைவெளியை யாரைக் கொண்டையா நிரப்புவது எம்மோடு எம்மத்தியில் வாழ்ந்த தெய்வம் நீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னோடு பழக சில காலம் கிடைத்தது என் பாக்கியம் என்றே கருதுகின்றேன். கடைசி நேரத்தில் என் பெயரை உன் நா உச்சரித்துக் கொண்டிருந்ததா. என் தெய்வமே என் நாமமெ உன் நா பட்டதால் புனிதமடைந்துள்ளது. இறுதிக்காலத்தில் எனை நீ அழைக்க பதில் கூறாமல் நான் பதுங்கி இருந்து விட்டேனா பதறுகிறதே என் மனம்.

இயற்கையெய்தி 31 அகவை அடைந்துள்ளன. நீ எம்மோடில்லா விட்டாலும் எம் நினைவுகளில் எம் செயல்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றாய். உம் குடும்பத்துடன் நாமும் குருவில்லா சிஷ்யர் போல் வாழ்ந்து, நினைவொன்று எமக்கிருக்கும் வரை அதில் நீ அரியாசனத்தில் வீற்றிருப்பாய்.

எஸ். சதாகரன்
காலசார உத்தியோகத்தர்
ஆரையம்பதி

## இனிய நினைவுகள்

ஓர் ஆசிரியன் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒழுக்க நியதிகளுக்குட்பட்டு வாழ்வதுதான் அவனது பெருமையைக் கூறும் வாழ்க்கையாக இருக்கும். தனது வாழ்க்கையை கூர்ந்து நோக்கி மற்றவர்களுக்கு படிப்பினையாக வாழ்வது மிக மேலானது. கடமைக்காக கடமையைச் செய்பவர்களும் உண்டு. கடமையை தனது வாழ்க்கையுடன் இணைத்து வாழ்பவர்களும் உண்டு. மிக அபூர்வமாகவே இவர்கள் காணப்படுகின்றனர். வணக்கத்துக்குரிய டானியல் குணரெட்ணம் சோமசுந்தரமவாகள் பெருமைப்படத் தக்க வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர். சிறந்த ஆசிரியராகவும் சிறந்த அதிபராகவும் வாழ்ந்து ஆசிரியர் சமூகத்துக்கே தனது முத்திரையைப் பதித்தவர். திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தொன்மை மிக்க தமிழ்க் கிராமம் சம்பூராகும். இக்கிராமத்தின் கல்விக்கான ஊற்றுக்கண்ணைத் திறந்து விட்டவர். தனது வாழ்நாளில் என்றும் மறக்க முடியாத பெரம் கல்வி சேவையை இக்கிராமத்திலேயே இப்பெருந்தகை செய்துள்ளார் என்றால் மிகையாகாது. உயர்ந்த தருமங்களிலே ஏழைச் சிறுவர்களுக்கு கல்வி வழங்குவது மிகவும் உயர்ந்தது. தன்னலம் கருதாது இக்கல்விச் செல்வத்தை வழங்குவதென்பது பெரிய காரியமாகும். இந்த அற்புதசேவையை சம்பூர் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி தனது உயர்ந்த சேவையை மேலும் உயர்ந்த புகழைப் பெற்றார்.

குழந்தைகளை வழிநடத்தும் நுணுக்கங்களை நன்கு அறிந்த ஆங்கில அசிரியராகத் திகழ்ந்தார். இவரது உழைப்பின் பெருமையாலே சம்பூர் மகா வித்தியாலயம் மூதூர் தொகுதியிலே சிறந்த பாடசாலையாகத் திகழ்ந்தது. பழகுவதற்கு இனியவர், பண்பாளர், அன்பான மனைவியினையும், நன்றிமறவாத பாசமுள்ள பிள்ளைகளையும் பெற்று வளர்த்தவர். அன்புள்ள மருமக்களையும் பெற்றுக் கொண்டவர். ஒருவருடைய வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு வேறு என்ன வேண்டும்? சிறந்த ஒரு மனிதப் பண்பாளரை இழந்து நிற்கும் அவர்களது குடும்பத்தினரது துன்பத்திற்கு ஆறுதல் சொல்ல முடியுமா? அவரது நண்பர்கள், மாணவர்கள் என்போர் இப்பரிவைச் சகித்துக் கொள்வார்களா? இவ்வத்தனை பிரிவினருக்கும் ஆறுதல் சொல்ல முடியுமா? இறைவனது பாதத்தை அடைந்த அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

வ.கனகசிங்கம்
முன்னாள் அதிபர்
ஆசிரியர் கலாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் டீ. ஜீ. ஐயா

எம். எஸ். அமானுல்லா
மூதூர்

அவரது பொன்மயமான நிறமும் கண்டிப்பும் கருணையும் கலந்து ஒலிக்கும் மென்மையான குரலும் இன்றைக்கும் நினைவில் இனிக்கின்றன.

அவரிடம் கற்றுக் கொள்வதே ஒரு சுகானுப்வம் தான் இன்னமும் கொஞ்ச நேரம் வகுப்பில் போதிக்கமாட்டாரா என ஏங்கவைக்கும் கற்பித்தல் வசீகரம் அவரது மூலதனம்.

மரபு ரீதியான எண்கணிதப் போதனைகளில் இருந்து விடுபடவும் பதிலாக அட்சர கணிதம் புகுந்து கொள்ளவும் பூர்வாங்க அறிமுகங்கள் மருவிய காலத்தில் அவரிடம் கணிதம் கற்றுக் கொள்ளும் பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பாரம்பரிய கற்றல் வழிமுறைகளுக்குப் புறம்பாக புதிய கோணத்தில் கற்றுக் கொள்ளும் போது ஏற்படும் ஆரம்ப சிரமங்களை அவர் விலக்க, விளக்கமளித்தவிதம் கற்றலில் ஆர்வத்தைத் தூண்டியது.

கணிதபாட போதனைகளோடு மட்டும் அவர் தன்னைச் சுருக்கிக் கொள்ளவில்லை. அவரது ஆங்கிலப் புலமை, எங்களுக்கு அப்பாடத்தில் ஈடுபாட்டை அதிகரித்தது. ஆங்கிலத்தை ஆங்கிலமாகவே உச்சரிப்பது அவரது பிடிவாதம் அவரது பிரத்தியேகப் பிடிமானம் கொண்ட குரலும் அவருக்குத் துணைநிற்க தூரத்தில் எட்டி நின்று போக்குக் காட்டிய ஆங்கிலம் எங்களை சினேகிதத்தோடு கண்சிமிட்டி அழைக்கும் சாதனை நிகழ்ந்தது.

இலக்கியப் பாடத்திற் கென்று வகுப்பில் நுழைந்தாரென்றால். புத்தகங்கள் புறங்காட்டிச் சென்றுவிடும் சந்திரமதி வகுப்பறைக்குள் நின்ற புலம்பித் தீர்ப்பது போல இலக்கியக் காட்சிகளை முன்னிறுத்தி விடுவார். நளனும் தமயந்தியும் எங்களது ஆதர்ச நண்பர்களாகி விடுவர் வெண்பாக்களை அவர் இராகபாவத்தோடு. பாடுகின்றபோது குரல் இனிமையா? வெண்பாக்கள் இனிமையா? என நாங்கள் மறுகி நிற்போம்... கவிஞர்களின் கற்பனைக்கும் மேலதிகமாக காட்சிகளை உருவகித்து ஒரு காவியச் சூழலை எங்களுக்கு நிர்மாணித்துத் தந்து விடுவார்.

1954ம் ஆண்டுமுதல் 1959ம் ஆண்டு வரை அவர் மூதூர் மத்திய கல்லூரி அதிபராக இருந்தார். அவரது காலகட்டத்தில் 90 சதவீதம் முஸ்லீம் மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக அது இருந்தது. ஆயினும் திரு. D. G. சோமசுந்தரம் ஐயா அவர்களையே தொடர்ந்தும் அதிபராகப் பிணைத்துக் கொண்டது.

அவர் அதிபராகக் இருந்த காலகட்டத்தில் பாடசாலையில் சிங்களப் பிரிவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கி வந்தது. எல்லாரையும் அன்போடு இணைத்துக் கொண்டு நிர்வாகக் கடமைகளை அவர் வெற்றிகரமாக செய்தார்.

எமது பாடசாலைக்கு அவர் அதிபராக நியமிக்கப்பட்டபோது வனப்புமிக்க வாலிபராக இருந்தார் மாலை வேளைகளிலும் எங்களுடன் அவரது நேரத்தை பகிர்ந்து கொள்வதிலேயே ஆர்வம் காட்டினார். விளையாட்டு மைதானத்தில் அவரும் ஒரு மாணவனைப் போலவே எங்களுடன் ஓடுவார் ஆடுவார் வெளியார்களுடன் உதைபந்தாட்டப் போட்டிகள் நிகழும் போது கூடவே நின்று கைதட்டி உற்சாகப்படுத்துவார். அதே நேரம் மாணவர்களின் ஆடும் திறனையும் குறைகளையும் மனதில் குறித்துக்கொள்வார். அடுத்த நாள் உரிமை கலந்த கண்டிப்போடு அவர் குறைகளையுக் குறிப்பிடும் போது இத்தனை துல்லியமாக ஆட்டங்களை அவதானித்து இருக்கிறாரா? என நாங்கள் அசந்து போய் நிற்போம்.

இன்னும் ஒரு பாடசாலையில் ஆசிரியையாக இருந்த மங்களம் அக்காவை வாழ்க்கைத் துணையாக வரித்துக் கொண்டார். அன்றிலிருந்து மங்களம் அக்கா எங்களுக்கு தாய்முறை ஆகிவிட்டார்.

மூன்று வருடங்களுக்கு முன்னதாக இருவரையும் ஒருநாள் கொழும்பில் சந்தித்தபோது வாஞ்சையுடன் கைகளைப் பிடித்துக் கொண்டு சுகம் விசாரித்து இன்னும் நெஞ்சில் நிழலாடுகிறது. எனது வாழ்க்கையின் முன்னேற்றங்கள் பற்றி பிள்ளைகள் கல்வி பற்றி ஒவ்வொன்றாக அவர்கள் விசாரித்து மகிழ்ந்த போது அவர்களது அன்பில் நான் உறைந்து போனேன் பிறர் நலன்களையும் தமது நலன்களாகவே போற்றி மகிழும் அந்தப் பெரியகுணம்.... அந்த இலட்சியத் தம்பதிகளின் அருங்குணம்.

கடந்தமாதம் நண்பர் திரு. பாலசுகுமார் தொலைபேசியில் டீ.ஜீ ஐயாவின் மரணச்செய்தியினை தெரிவித்தபோது அதிர்ந்து போனேன்.

ஆசான்களை மரணம் தீண்டுவதுண்டா? கல்விக்கு உயிரளித்தோர் மரணிப்பதில்லை என்ற ஆண்றோர் வாக்கு மனக்கண்முன் தோன்றி மறைந்தது.

எமது மூதூர்ப்பட்டிணம் முஸ்லீங்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதி ஆகும் ஆயினும் டீ. ஜீ ஐயா அவர்கள் அதிபராக இருந்த காலத்திலம் சரி அதன் பின்னரும் சரி அன்னாரை மூதூர் மக்கள் மிக்க அன்போடு நேசித்து வந்தார்கள் என்ற செய்தியே அவரது கல்விச் சேவைக்குக் கிடைத்த அங்கிகாரம் ஆகிவிடுகிறது.

நல்ல ஆசிரியராக நல்ல அதிபராக நல்ல தந்தையாக எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல மனிதராக நம்முடன் வாழ்ந்த அவரை மாணவ உலகம் என்றும் நினைவில் வைத்திருக்கும் அவரது காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது நமக்குக் கிடைக்கும் மிகப்பெரிய பெருமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி கலாசார சமூக சமயப் பணியாற்றிய பெரியார்

கல்வி கலாசார சமூக சமயப் பணிகளை மிக அமைதியாக மேற்கொண்ட அமரர் வணக்கத்துக்குரிய டானியல் ஜி. குணரெட்ணம்-சோமசுந்தரம் அவர்கள் மூதூரில் 1954ம் ஆண்டு கல்விப் பணி செய்ய காலடி வைத்தார். மூதூர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கடைமையாற்றி பின்தங்கிய நிலையில் இருந்த இப்பாடசாலையை தீர்க்க தரிசனத்தடன் முஸ்லிம் சிரேஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்துவதற்குப் பெரிதும் உதவினார். மூதூர் முஸ்லிம் மக்கள் அமரர் அவர்களை அன்று பாராட்டினார்கள். இன்று அன்புடன் நிறைவு கூர்கின்றார்கள்.

கல்விச்சேவையின் பொருட்டு 1959ம் ஆண்டு மட்/பட்டிருப்பு மகா வித்தியாலயம் அதனைத் தொடர்ந்து மட்/களுதாவளை மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கற்றல் கற்பித்தல் தொழிற்பாட்டில் சிறந்த விழுமியங்களோடு கூடிய நல்லாசானாகத் திகழ்ந்தார். கல்விச் செல்வத்தை வாரி வழங்கினார். மாணவர்களுக்கு ஒழுக்கத்தோடு கூடிய ஆங்கில அறிவினை மிகத்துல்லியமான முறையில் கற்பித்தார். மேற்படிப்புக்கு ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி விசேட வகுப்புகளை மேற்கொண்டார். அன்னாரின் மாணவர்கள் இன்று நன்றி உணர்வோடுநினைவு கூர்கின்றார்கள்.

அமரர் அவர்களின் சிறந்த ஆற்றலையும் நற்பண்புகளையும் தன்னலமற்ற கல்விச் சேவையினையும் அறிந்த கல்வித் தாகங் கொண்ட சம்பூர் மக்கள் தாங்கள் சார்ந்து நின்ற அரசியற் பிரமுகர்களின் துணைக் கொண்டு 1965 ம் அண்டு முற்பகுதியில் நிறைவேற்று அதிபராக் பெற்றுக் கொண்டனர். அப்பதவியை நிறைந்த ஆர்வத்தோடும் தன்னம்பிக்கையோடும் ஏற்றுக்கொண்டாா. இக்காலக் கட்டமே அன்னாரின் கல்விச் சேவையின் உச்சக் கட்டமாக அமைந்தது. சம்பூர்ப் பாடசாலை மாணவர்களை தன் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டாா. மக்களை தன் சகோதரர்களாகவும் நண்பர்களாகவும் ஏற்றுக்கொண்டார். தன் முயற்சியை முற்றுமுழுதாக அர்ப்பணித்தார்.

மூதூர் பிரதேச மக்கள் போற்றக்கூடிய விதத்தில் சம்பூர் வித்தியாலயம் சகல துறைகளிலும் பரீட்சைப் பெறுபேறுகளிலும் வெற்றியீட்டியது. அமரர் அவர்களின் சேவையின் மிமையால் பாடசாலையின் கல்வி வளர்ச்சியின் அடிப்படையில் கனிஷ்ட வித்தியாலயம் தி/சம்பூர் மகா வித்தியாலயமாக 1968ம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டது. சம்பூர் மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் பூரித்தனர். பெருவிழாவெடுத்து அமரர் அவர்களைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தனர். இன்றும் நினைவு கூர்ந்து உள்ளம் உருகி நிற்கிறனா.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் கல்வி சேவையில் பெரும் வெற்றியீட்டிய அமரர் அவர்கள் நீண்டகாலம் கடமையாற்றியதின் காரணமாக திரு/புனித வளனார் ஆண்கள் பாடசாலையில் கடமையை ஏற்றுக் கொண்டார். 1975 - 1981ம் ஆண்டு கடமையாற்றிய பின்பு சேவையின் சிறப்பால் 1981ம் ஆண்டு வளர்ந்தோர் கல்வி அதிகாரியாக பதவி உயர்த்தப்பட்டார். 1981 - 1987 வளர வளர்ந்தோர் கல்வி அதிகாரியாக கடமையாற்றிய காலப் பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் அனைத்துச் சிறு கிராமங்களுக்கும் சென்று வளர்ந்தோர், கல்வித் தேவை, சமூகத் தேவை சமயத் தேவை அனைத்தையும் அறிந்து இணைந்த சேவையினைப் பெருமளவு செய்தார். இதனால் மேலதிகாரிகளால் சிறந்த வளர்ந்தோர் கல்வி அதிகாரியெனப் போற்றப்பட்டார். திருகோணமலை மாவட்ட மக்கள் அன்புடன் நினைவு கூர்ந்து உள்ளம் கலங்கி நிற்கின்றனர்.

உடலால் உள்ளத்தால் கல்வி கலாசார சமூக சமயப் பணியின் ஆர்வத்தால் தளர்ச்சியடையாத நிலையில் அனுபவ முதிர்ச்சியின் உச்சக்கட்டத்தில் வயதும் அறுபதைத் தொட்டு விட்டது. இதன் விளைவாக 1987 ம் ஆண்டு முழுத்திருப்தியோடு ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். அதே ஆண்டில் சிறுவர் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் புனாவாழ்வு உதவித் திட்டமிடல் அதிகாரியாகக் கடமையை ஏற்றுக் கொண்டார். சிறுவர்களின் சத்துணவுத் திட்டம், சேமிப்புத் திட்டம், கல்வித் திட்டம், பராமரிப்புத் திட்டம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டார். சிறப்பாக வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் சிறுவர்களை ஏற்று பொறுப்புடன் செயற்படக்கூடிய வளர்ப்புப் பெற்றோர்களை இனங்கண்டு அனாதை சிறுவர்களை அவர்களிடம் ஒப்படைத்து தார்மீக அடிப்படையில் மனித நேயத்துடன் செயற்பட்ட பெருமை அமரர் அவர்களை முழுமையாகச் சாரும் அனைவரும் நிறைந்த நன்றி உணர்வோடு நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

சிவக்கொழுந்து
ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்
பணிப்பாளர். மட்டக்களப்பு

# Heaven's Gain Is Our Loss.

**"I am the Resurrection and the life. He who believes in me, though he dies, yet shall he live , and who ever lives and believes in me shall never die"**
**John - 11: 25.26**

***Rev. Daniel Gunaratnam Somasundaram came to my home-town Mutur as an English Teacher. He was a versatile teacher, fluent in English , Tamil and Sinhala as well. As a teacher, he toiled hard and left no stone unturned for the betterment and upliftment of the poor, rural students. He had guided and moulded his own children and many more poor students to the desired form. In doing so he earned the praise of those in School and Society. Though he was a religious minded person strongly inclined to the service of God , he fitted in very well in Mutur where all the communities lived in peace and harmony. He had a unique place among his colleagues in the Education Department. His wide range of experience, his dynamic personality and hard work helped him to take firm strides towards higher positions in the Department of Education.***

***He was keen in inducing the public to take interest in Social activities and Games such as Cricket and Volley Ball in remote villages to create an awareness of togetherness. The people of Mutur and the relatives of his better half accepted him as a silent and an efficient School Principal with Principles in life. Rev. D. G. S. was not a man guided by his emotions and impulses. He was always cool and calm. His intelligence in distinguishing between right and wrong helped him and his dependents to protect them from adversaries.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*His home is famous for the taste of the traditional hospitality of Mutur. Men of his calibre are the need of the hour to build up a right thinking Society and Nation.*

*We all sincerely thank God, his parents and his loving family for having encouraged him to work among us for a good period of time. After retiring from Educational service he was not satisfied in being only the leader of his family. He wanted to be an active preacher to serve God without relaxing till his last breath. God was with this pious gentleman at all times of need and people gathered around him to admire his integrated personality.*

*He was a proud son, kind husband, beloved brother, a special father, amiable father - in - law, amusing grand father, dedicated Teacher, true Preacher, a good friend and at the same time a very strict disciplinarian who hated to hurt even the feelings of another man. It was a Thursday in the Jubilee year of Jesus Christ on the 8th day of June, 2000, after a sudden and brief illness inspite of the generous fight of the imminent doctors at the Batticaloa Teaching Hospital around 10.30 a.m he wished and bade Good-Bye to all of us. Heaven's Gain was our loss. All were appalled when the sad news went on the air around the world. It is an irreparable loss not only to his faithful wife and children but also to all his friends and relatives. People started pouring in at his premises to express their deep sorrow. Even though we are missing him in our midst his service, ideas and his writings will ever remain fresh with us. After prayers his faithful people laid him to rest on Sunday the 11th at 12.00 noon*

*May the merciful God give his family the strength and courage to get over this sudden calamity.*

*Vettivelu Sivagnanam*
*Mallikaithivu*
*Mutur*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்கவில்லை பிறந்துள்ளார்

நான் சிறிதுகாலமே அவருடன் தொடர்பு கொண்டிருந்தாலும் யாரிடமும் காணாத சில அருமையான அம்சங்களைக் கண்டுகொண்டேன். அழகான புன்சிரிப்பு எவரையும் புண்படுத்தாத இங்கிதமான பேச்சு, கருணை ஒளிவீசும் தீட்சண்ணியமான பார்வை, கடினமான விடயங்களையும் இலகுவாக கையாளும் திறமை போன்றவற்றை அவரிடம் நான் கண்டேன். எனக்கு மனிதனின் உண்மையான பரிமாணத்தை உணரவைத்தவர் அவர். அவருக்கு இரண்டு குடும்பம் ஒன்று தனது மனைவி, பிள்ளைகள் மற்றையது திருச்சபை. எல்லோரும் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காகவே இறைபணி பூண்டவர்.

தமிழ் ஆர்வம், கவிதை, கட்டுரை, சிறுகதை, சிறந்தபிரசங்கச் சொல்மொழிகள் என்று எழுத்துத்துறையிலும், கலைத்துறையிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட அவர் முகத்தில் நான் கோபம், வெறுப்பு என்பவற்றை காணவேயில்லை. நகைச்சுவையாய் பேசியே நல்லவிடயங்கள் பலவற்றை எனக்கு கூறியுள்ளார். நான் அவருடன் பேசிய கடைசி வசனம் "என்ன மேல்வீட்டுக்காரர்கள் எப்படி"? என்னையறியாமலேயே என் வாயிலிருந்து வந்த வசனத்தைப் போலவே அடுத்தநாள் இந்த உலகத்தைவிட்டு மோட்ச உலகமாகிய மேல்வீட்டை நோக்கி சென்று விட்டார். அவரின் இறுதி ஊர்வலத்தில் வைத்து நான் அறியாத எத்தனையோ முகங்களை. சோமசுந்தரம் அவர்களின் நன்நடத்தையின் பல்வேறு பக்கங்களையும் அறிந்து எனக்குள்ளே வியந்துகொண்டேன்.


இறப்பு என்பது எல்லோருக்கும் நிஜம் ஆனால் நல்லமனிதர்களுக்கு ஏன் இவ்வளவு விரைவாய் இந்த சாவு வருகிறது என்பது தான் என் வினா?

வணக்கத்துக்குரிய டி ஜி. சோமசுந்தரம் இறக்கவில்லை. பல்லாயிரம் மக்கள் மனங்களில் அன்பு ஊற்றாக, சிறந்த வழிகாட்டியாக பிறப்பு எடுத்துள்ளார்.

க. அன்பழகன்.
கலாசார உத்தியோகத்தர்
ஏறாவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்களின் துன்ப நேரத்திலே ஜெபத்தினாலும், பிரசன்னத்தினாலும் சரீர உதவியாலும், இன்னும்பல வழிகளிலும் உதவிய எமது உறவினர், நண்பர்கள், சபைத்தலைவர்கள், சபையினர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி! - குடும்பத்தினர்.

අප දුකින් සිටින මොහොතෙහි ඔබ සැම පැමිණ යාඥාවෙන් ශක්තිය ලබා දුන්නාවූ ශ්‍රමය සහ සහයෝගය ගැන විශේෂ ඥාතීන්, මිතුරන්, සභාදායකයින් සහ අනෙකුත් සභාසාමාජිකයින් වෙත මෙයින් ස්තූතිවන්ත වන අතර, ඔබ උපය කොට සලකමි.

ස්තූතියි - පවුලේ සැම.

We wish to thank all our relatives, friends, pastors and church members for your constant support to us by your prayers, presence and physical and material help during these days of sorrow.

Thank you - family.

Cover page theme:

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன். (வெளி. 3:12)

ජය ගන්නා මාගේ දෙවියන් වහන්සේගේ මාලිගාවෙහි කණුවක් කරන්නෙමි. (එළිදරව්ව 3:12)

Him who overcomes I will make a pillar in the temple of my God. (Rev. 3 :12)


# முன்னோக்கி மேனோக்கி வீடுநோக்கி

-வண.டி.ஜீ.சோமசுந்தரம்-

முன்னோக்கி மேனோக்கி வீடு நோக்கி
        உளமகிழ்ந்து நான் விரைவேன்
என்செயினும் வெறுமையே நிறைந்திருக்கும்
        இவ்வுலக வாழ்வை நீத்து
என் முன்னே உளதாமோர் கிரீடம்
        அதனிடத்தே சேர்ந்திடிலோ மகிமை
மின்னிடுதே தேவன் தரு தலங்கள்
        வானத்திற் கட்டப் பட்டவைகள்.

முன்னோக்கி மேனோக்கி வீடுநோக்கி
        இங்கில்லை ஆறுதலே எந்தனுக்கு
என்பாதை வனாந்தரமே அதிலடப்பேன்
        என்றேவன் எனக்கதையே வைத்திட்டாரே
மன்னாவாம் மாவிருந்து எனக்குண்டங்கு
        அங்கு புகழோடினிது வாழ்ந்திடுவேன்
ஒன்னார்கள் புகுந்தழிக்க முடியாதந்தப்
        பொன்னகர நோக்கி நான் போகின்றேனே.

முன்னோக்கி மேனோக்கி வீடுநோக்கி
        ஓடுதலே இனிமைதரும் ஓட்டமாமே
என்நேசர் முகங்காணல் இணையில் இன்பம்
        அளவில்லாச் சந்தோஷமெனக்குண்டங்கு
பொன்னான சிங்கா சனத்தை நோக்கிப்
        போயிடிலோ எந்தனுக்குத் திருமணமே
நன்நேசர் மணவாளர் அவரை எந்தன்
        சொந்தமதாயாக்கிடுவேன் மகிழ்வேன் நானே.





A poem written by Rev. D. G. Somasundaram that describes his joyous anticipation of the future glory after life on earth. This was published in the Back to the Bible magazine in May 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org